(9)

# ஆளும் கட்சிக் குழு இன்று முதல்முறையாகக் கூடுகிறது

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 12

இதழ்: 115

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 23 ரபி. அவ். 30 சனிக்கிழமை [6-6-70]

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

கோட்டை, சனி

ஆளும்கட்சிக்குழு இன்று பிற்பகல் முதல் தடவையாகக் கூடுகிறது. ஐக்கிய முன்னணி அரசின் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தலைமையில் ஆளும் கட்சிக்குழுக்கூட்டம் நடைபெறும்.

நாளை மறுதினம் ஆளும் கட்சிக் குழுவினர் திருமதி பண்டாரநாயகா தலைமையில் விசேஷ ரயிலில் அநுராதபுரம் செல்கின்றனர். அன்றைய தினம் மகாபோதி சங்கத்தில் விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர்.

நாளை காலை ஆட்சி மன்றம் கூடி சபாநாயகர் உப சபாநாயகரைத் தெரிவு செய்யும்.

### தமிழரசு ஆட்சிமன்றக்குழு

தமிழரசுக்கட்சி ஆட்சி மன்றக்குழுவும் இன்று கொழும்பில் கூடுகிறது. ஆட்சிமன்றத்தில் தமது நிலைகுறித்து இன்று முடிவு செய்யும்.

## பதவி இழந்த பால்சபை ஊழியருக்கும் வேலை!

கோட்டை, வெள்ளி

பால்சபையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த எட்டுப்பேருக்கும் மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதாக இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

விவசாய அமைச்சர் திரு. கொபக்கடுவவின் உடனடி உத்தரவைத் தொடர்ந்து இவர்கள் எட்டுப்பேருக்கும் வேலைவழங்கப்பட்டுள்ளது.

# "மக்கள் பொறுமை காட்ட வேண்டும் நாடு நலம்பெற ஒத்துழைப்பு தருக"

## டாக்டர் என்.எம். பெரேரா வேண்டுகோள்

கோட்டை, வெள்ளி

"இலங்கையின் இன்றைய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பற்றுக் குறையை சீர்செய்யும்வரை பொதுமக்கள் அனைவரும் பொறுமை காட்டவேண்டும், விடுமுறைக் காலத்தில் யாத்திரை செல்லல், உல்லாசப் பிரயாணம் ஆகியவைகளை நிறுத்தி நாட்டின் எதிர்காலச் சுபீட்சத்திற்கு ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்."

இவ்வாறு நிதியமைச்சர் கலாநிதி என்.எம்.பெரேரா நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்தார்.

நிதியமைச்சர் நாட்டின் நிதி நிலைமை பற்றிப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

"நாட்டின் இன்றைய நிதி நிலைமையைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறவேண்டி ...

... களில் கடன்பெற்றும் வெளிநாட்டு வங்கிகளில் கடன் பெற்றும்நிறைவுசெய்ய முந்திய அரசாங்கம் முற்பட்டது. ஆனால் அரசாங்கம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கவில்லை.

கடந்த அரசாங்கம் தனது அரசியலின் நலன் ஒன்றையே கருத்தாகக் கொண்டிருந்தது. இதனால் உண்மையை மாற்றி திரித்து ...

... கொள்ளப்படவில்லை. அத்துடன் செல்மதி நிலையையும் சேர்த்தால் பற்றுக்குறை 30 கோடி 20 லட்சமாகும்.

இந்த நிலையைச் சமாளிக்க குறுகிய கால கடனுதவி குறைவாகவுள்ளது. கடன் பற்றிய மனு உடன் படிக்கைகள் செய்யப்பட வேண்டும். ஆனால் உணவுப் பொருள் பற்றிய வகையில் ...

### இலங்கை மந்திரிசபைக்கு

## இந்திய மந்திரிசபையை விட சிறந்த ஸ்தானம்

கொழும்பு, சனி

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் இந்திய அரசின் மந்திரிசபையைவிட சிறப்பான ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றது ஸ்ரீமாவின் மந்திரிசபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பகுதியை விட அதிகமானவர்கள் அங்கம் வகிப்பதே இதற்குக்காரணம்,

இந்திய லோகசபையின் உறுப்பினரான டாக்டர் பாபுவோ பாட்டே இவ்வாறு கூறியிருக்கிறார்.

பண்டாரநாயக்க அம்மையாருக்கு தெய்வ அனுக்கிரகம் இருக்கின்றது. மக்கள் குரல் தெய்வக்குரலாகும். இந்தக்குரலே மாபெரும் வெற்றியைத்தேடிக்கொடுத்துள்ளதுஎன்று டாக்டர் பட்டேல் கூறினார்.

திரு பட்டேல் இலங்கையில் தங்கியிருந்த சில நாட்களுக்குள் இந்திய மாதச் சஞ்சிகையான மதர் இந்தியாவில் திருமதி பண்டாரநாயக்கா சம்பந்தமாக கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதுவதற்காக விஷயங்களைச் சேகரித்துக்கொண்டு போயிருக்கிறார்.

### 55 வயதடைந்த

## ஜூன் 8ல் தேர்தல்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 7-ந் திகதி செனட்சபை கூடும்பொழுது நீதிஅமைச்சர் திரு. ஜே. எம். ஜயமனே, தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் ஆகிய இருவரும் சமூகமளிக்கமாட்டார்கள்.

இவர்கள் ஆட்சிமன்றத்தினால் தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள்.

ஆட்சிமன்றம் இம்மாதம் 7-ந் திகதி கூடும்பொழுது செனட்சபையில் இருக்கும் இரு வெற்றிடங்களும் அறிவிக்கப்பட்டு அதற்கான தெரிவு ஜூன் 8-ந் திகதி இடம்பெறும்.

இத்தேர்தல் கீழ்சபையில் நடந்து முடியும் வரை இவர்கள் செனட்டில் ங்களுக்குரிய இடங்களில் அமர முடியாது.

— —

### வயதிற் குறைந்த

## திரைப்பட கூட்டுஸ்தாபனம்

கோட்டை, வெள்ளி

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேராவை சிங்கள கலைகலாச்சாரக் கழகக் குழுவினர் சந்தித்துப் பேசினர். திரைப்படக் கூட்டுஸ்தாபனம் அமைப்பதற்குரிய நகல் மசோதா ஒன்று விரைவில் தயாரிக்குமாறு தகவல் ஒலிபரப்பு இயக்குனரிடம் கேட்டிருப்பதாக அவர்களிடம் அமைச்சர் கூறினார்.

இத்தூதுக் குழுவினர் அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர். தகவல் பகுதி இயக்குனர் திரு சரத் அமுனுகம, ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன மாஅதிகாரி திரு. சுசில் முனசிங்கா, ஒலிபரப்பமைச்சின் உதவிக் காரியதரிசி திரு ஒஸ்வால்ட் திலகரத்தின, அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசி திரு. ஆரியவம்ச பத்திராஜா ஆகியோரும் அமைச்சருடன் இவ்வுரையாடலின் போது இருந்தனர்.

அமைச்சரைப் பேட்டி கண்ட கலாச்சாரக் குழுவில் பலர் அங்கம் வகித்தனர்.

திரைப்படத் தொழில் ...

... அமைப்பைச் சிறப்பாகச் செய்வதற்கு ஒத்துழைப்பதோடு, அதன் அபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கலைஞர்கள் தொடர்ந்து தமக்களிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

— —

### பூகம்ப எதிரொலி

## கடதாசி வீடுகளில் மக்கள்

லீமா, ஜூன் 5

பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலிகொண்ட பூகம்பத்தை தொடர்ந்து பேருவில் உள்ள மக்கள் கடதாசி வீடுகள் கட்டித் தற்காலிகமாக வசிக்கின்றனர்.

பூகம்பத்தின் தாக்கம் படிப்படியாகக் குறைந்துவிடுமென்று அவதானிகள் தெரிவிக்கின்றார்களாயினும் மக்கள் அச்சத்தின் காரணமாகக்வே கடதாசி வீடுகளில் வசிக்கின்றார்கள்.

பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உதவியளிக்கமுடி ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாபுவோ பாட்டே இவ்வாறு கூறியிருக்கிருர்.

பண்டாரநாயக்க அம்மை

களைச் சேகரித்துக்கொண்டு போயிருக்கிருர்.

## 55 வயதடைந்த

# அரசாங்க ஊழியருக்கு கட்டாய ஓய்வு

கோட்டை, வெள்ளி

55 வயதையடைந்த அரசாங்க ஊழியர்கள் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

55 வயதைத் தாண்டிய சில உயர் அதிகாரிகளின் சேவைகள்நீடிக்கப்பட்டிருந்தது. இவர்களை ஓய்வுபெறுமாறு திறைசேரி ஆலோசனை கூறியுள்ளது.

50-55-க்கு மிடைப்பட்ட அரசாங்க ஊழியர்கள் சிலரும் ஓய்வுபெறுமாறு கேட்கப்பட்டார்கள் எனவும் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

உற்சாகமுள்ள இளைஞர்களுக்கு மேற்படி அதிகாரிகளின் பதவிகளை அளித்து நிர்வாகத்தைச்சிறப்பாக நடாத்திச் செல்லவே அவர்களை ஓய்வுபெறுமாறு அரசாங்கம் கேட்டதற்குக் காரணம் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

55 வயதையடைந்த அரசாங்க ஊழியர்களது பட்டியலொன்றை திறைசேரி விரைவில் தயாரிக்கவிருக்கிறது எனத்திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசாங்க சேவையிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை அறிவதற்கே மேற்படி பட்டியல் தயாரிக்கப்படவிருக்கிறது.

## விசேஷ அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம், சனி

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான பரிவாரத்தில் ஸ்ரீ வேணுகோபாலர், ஸ்ரீராமர், சந்தானகோபாலர் ஸ்தாபித்த கோவில்கள் திருத்தி அமைக்கப்பெற்று நாளை காலை அந்த மூர்த்திகளை அந்தந்தக் கோவில்களில் எழுந்தருளச் செய்து விசேஷ அபிஷேகமும் அதன் பின் விசேஷ பூசையும் நடைபெறும்.

நடந்து முடியும் வரை இவர்கள் செனட்டில் ...ங்களுக்குரிய இடங்களில் அமர முடியாது.

— —

## வயதிற் குறைந்த இரு எம். பிக்கள்

கோட்டை, வள்ளி

பொதுத்தேர்தலில் ஆட்சி மன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் மிஹிரியங்கனை ஆட்சி மன்ற அங்கத்தவர் திரு. ஈ. விக்கிரமரத்தின, வெலியத்தை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு மகேந்திரா ராஜபக்ஷா ஆகிய இருவரும் ஆகக் குறைந்த வயதுடையவர்கள் எனத் தெரியவருகிறது

## நிர்மாண அமைசின் கீழ்இயங்கும்

கோட்டை, வியாழன்

இதுவரை உள்ளூராட்சி அமைச்சின் கீழ்இருந்துவந்த மாளிகாவத்தை வீடமைப்புத்திட்டம் எதிர்காலத்தில் வீடமைப்பு நிர்மாண அமைச்சின்கீழ் இயங்கும்.

## கூட்டு சேராக்கொள்கை பயனளிக்கவில்லையாம்

### சஞ்சீவரெட்டி கூறுகிறுர்

சென்னை, ஜூன் 5

இந்தியாவின் கூட்டு சேராக்கொள்கைபயனளிக்கவில்லையென்றும் இந்தியாவின் வெளி விவகாரக் கொள்கை புனராலோசனை செய்யப்படவேண்டுமென்றும் இந்திய ஆட்சிமன்ற முன்னுள் சபாநாயகரும் இந்திய ஜனதிபதி பதவிக்குப் போட்டியிட்டவருமான திரு: என். சஞ்சீவரெட்டி நேற்று சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

தேசிய விடுதலை முன்னணி அமைக்கும் நக்ஸல் பாரிகளின் முயற்சி வெற்றியளித்தால் இந்தியாவும் மற்ருெரு வியட்நாமாகிவிடும் என்று திரு. சஞ்சீவரெட்டி கூறினர்.

...மைச்சர் நாட்டின் நிதி நிலைமை பற்றிப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

"நாட்டின் இன்றைய நிதி நிலைமையைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறவேண்டியது என் கடமையாக உள்ளது.

1970ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் மேலோங்கி, சுபீட்ச நிலையை அடைந்துவிடும் என முந்திய தேசிய அரசாங்கம் பிழையான தகவல்களைக் கொடுத்தது. 1955ம் ஆண்டில் ஏற்பட்ட சுபீட்சமற்ற நிலைமை மாறி நாடு பலதுறையிலும் தன்னிறைவு பெறுமென்று எந்த அடிப்படையைக்கொண்டு தெரிவித்தார்களென்று நம்மால் கூறமுடியவில்லை.

மத்திய வங்கி, திறைசேரி என்பன முன்னைய அரசாங்கத்திற்கு விடுத்துள்ள எச்சரிக்கையைப் பற்றி அவர்கள் கருத்துக்கொள்ளவில்லை தவறுக்காக நாம் ஓர் அரசாங்கத்தை மன்னிக்கலாம். ஆனுல் கடந்த அரசாங்கம் கட்டுக்கதைகளைப் பரப்பி, மக்களை நம்பவைக்க முற்பட்டுள்ளது. அவர்கள் தந்த தகவல்கள் யாவும் உண்மைக்குப் புறம்பானவைகளாகவே உள்ளன.

### உள்நாட்டில்

1969க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலத்தில் செலவினம் அதிகரித்தும், வருமானம் குறைவாகவும் இருந்தது. இதனுல் பற்ருக்குறை 107கோடி ரூபாவாக உள்ளது.

இந்தப் பற்ருக்குறையை, வரிப்பளுவை ஈடுசெய்யக்கூடியவர்களிடமிருந்து அறவிடவில்லை. தப்பான வரவு செலவை, உள்நாட்டு வங்கி

...பார்த்த உதவிகள் ...க்கவில்லை.

கடந்த அரசாங்கம் தனது அரசியலின் நலன் ஒன்றையே கருத்தாகக் கொண்டிருந்தது. இதனுல் உண்மையை மாற்றி திரி...த்திள்ளது. இந்த நிலையில் உண்மையான நிதிநிலையை மக்களுக்கு எடுத்துக் கூறுவது என்கடமையாகும்.



கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பற்ருக் குறையின் அளவை மதிநுட்பத்திலும் தகுந்த சேவையிலும் முந்திய அரசாங்கம் குறைத்திருக்கலாம்.

### வெளிநாட்டு வர்த்தகம்

ஏற்றுமதி வர்த்தக வருமானம் கடந்த வருடத்தில் குறைந்திருந்தது போல அடுத்த ஆண்டிலும் வீழ்ச்சியையே எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் டிசம்பர் வரையுமான செலவினத்தில் 111 கோடி 40 லட்சம் செலவின பற்ருக்குறையாகும். அதில் 27 கோடி 20 லட்சத்தை ஈடுசெய்ய எவ்வித வழியும் மேற்

இந்த நிலையைச் சமாளிக்க குறுகிய கால கடனுதவி குறைவாகவுள்ளது. கடன் பற்றிய மனு உடன்படிக்கைகள் செய்யப்பட வேண்டும். ஆனுல் உணவுப் பொருள் பற்றிய வகையில் எவ்வித மாற்றமும் செய்ய முடியாது. ஆனுல் கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் மாற்றஞ் செய்யப்படலாம்.

ஏற்கனவே மோசமான இந்த நிலையில் மாற்றங்களை திடீரென புகுத்துவதனுல் நிலைமை மேலும் சிக்கலடைந்து விடும். ஆகவே குறைபாடுகளைச் சீர்செய்வதே நமது முதற்பணியாகும்.

அமைச்சருடன் இவ்வுரையாடலின் போது இருந்தனர்.

அமைச்சரைப் பேட்டி கண்ட கலாச்சாரக் குழுவில் பலர் அங்கம் வகித்தனர்.

திரைப்படத் தொழில் விருத்திக்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படு மெனவும், ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றிக்கு இவர்கள் பாடுபட்டதற்காக நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் இவர்களிடம் கூறினுர்.

முன்னைய நிர்வாகத்தினர் செய்த தவறுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். திரைப்படத் தொழில்

னும் மக்கள் அச்சத்தின் காரணமாகவே கடதாசி வீடுகளில் வசிக்கின்ருர்கள்.

பூகம்பத்திஞல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உதவியளிக்கமுடியாத வகையில் விமான இறங்குதுறை, பாதைகள் படுமோசமாகச் சேதம் அடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## 'மெஜாரிட்டி

கோட்டை, வெள்ளி

உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்களின்படி ஐ. தொ. காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 3,16:809 ஆகும்.

அமெரிக்க நாளிதழ் பாராட்டு:

# அமைதியான ஆட்சிமாற்றம் ஆசியாவில் இலங்கையில் மட்டும் தான் நடந்திருக்கிறது"

கோட்டை, வெள்ளி

சுதந்திரமான பொதுத் தேர்தல் முறையில் சமாதானமாகஎதிர்க்கட்சி அரசாங்ககட்யாக மாற்றம் பெற்றிருப்பது ஆசியாவிலேயே இதங்கையில்மட்டும்தான் ஏற்பட்டிருக்கிறதுஎன்று'அமெக்கத் தலையாயநாளிதழ்' கிறிஸ்ரியன் சயன்ஸ் மொனிற்றர்' தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

'இலங்கையில் நடந்த சாதாரண மாற்றம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

உலகத்திலுள்ள முதலாவது பெண் பிரதம மந்திரி மீண்டும் ஐந்து வருடத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்துள்ளார். முதல் முறையாக அவர் 1960ல் பிரதமராக வந்தபோது உலக நாடுகளெல்லாம் வியந்து பாராட்டின. அவருடைய கணவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவருமான திரு. எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்படும்வரை திருமதி ஸ்ரீமாவோ அரசியலில் ஈடுபடவில்லை.

அயல்நாடான இந்தியாவிலும் மற்ருெரு பெண்ணே பிரதமராக இருக்கிருர். ஆசியாவிலுள்ள சில நாடுகளில் தான் அந்நாடுகள் சுதந்திரம் பெற்றபின்னர் ஆட்சிமன்ற ஜனநாயகமுறை தொடர்ந்துகடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இவற்றில் அதிகாரத்தை ஒழுங்கான முறைப்படி எதிர்க்கட்சிக்கு அரசாங்கத்தைக் கையளித்தது இலங்கையில் மட்டும் தான் என்று சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

— —

## அமைச்சரை சந்தித்தார அமைச்சர்

கொழும்பு, வெள்ளி

நீர்ப்பாசன மந்திரி திரு. மைத்திரிபால சேனுநாயக்கா நியமித்த மூன்று கமிட்டிகளின் தலைவர் தபால் மந்திரி திரு. செல்லையா குமாரசூரியர் அமைச்சர் திரு. மைத்திரிபாலாவை இன்று சந்தித்தார். மகாவலி திட்டம் உட்பட மூன்று விஷயங்கள் குறித்தும் சில வாரங்களில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதாக அமைச்சரிடம் அவர் உறுதியளித்தார்.' (சி.பி.ஏ)

— —

## யு. என். பி. கூடுகிறது

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டம், கொழும்பிலுள்ள அதன் தலைமைக் காரியாலயமான ஸ்ரீகோதாவில் இன்று நடைபெறும். அடுத்து என்ன செய்வதென்பது குறித்து இன்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும். (சிபிஏ)

மீசாலை கார் சாரதி கொலை

# கொலையாளிகளின் உடுப்புக்களை பொலிஸார் கண்டு பிடித்தனர்!

## வாலிபர் ஒருவர் கைது;இருவர் தலைமறைவு

பூநகரி, வெள்ளி

மீசாலையை சேர்ந்த கார் சாரதிசிதம்பரராசா கொலை சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸார் ஒருவாலிபரை கைதுசெய்துள்ளார்கள். இக் கொலை சம்பந்தமாக பொலிஸார்நடத்திய தீவிர விசாரணையின்பின் இவர் கைது செய்யப்பட்டார். இக் கொலை சம்பந்தமாக மற்றும் இரு சந்தேக நபர்களை பொலிஸார் தேடிவருகின்றனர்.

கார் சாரதியான சிதம்பரராசா பூநகரியில் உள்ள ஒரு காட்டில் கடந்தமாதம் கொலைசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபருடன் பூநகரிக்கு சம்பவம் நடந்த இடத்திற்கு விஜயம் செய்த பொலிஸார் கொலைசெய்தவர்கள் உடுத்திருந்த உடுப்புகள் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்து எடுத்தனர்.

அதோடு கார் சாவியையும் வேறுசில பொருட்களையும் பொலிஸார் எடுத்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த கைரேகை நிபுணர் கொலை செய்யப்பட்ட இடத்தில் கிடந்த போத்தலிலும் மற்றும் காரிலும் இருந்து கைரேகை யடையாளம் எடுத்துச் சென்றுள்ளார், பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணைசெய்துவருகின்றனர்.

# ஆலயத் திருட்டுகளைத்தடுக்க ஆலோசனை மகாநாடு

## சைவபரிபாலகர்கள் 12ம் திகதிகூடுவர்

யாழ்ப்பாணம், சனி

அண்மைக் காலங்களில் சைவாலயங்களில் நடைபெற்ற திருட்டுக்கள்பற்றியும் விக்கிரகங்கள் பெயர்க்கப்பட்டதுபற்றியும் ஆராய்ந்து இவ்வித சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெருது தடைசெய்யுமுகமாக இம் மாதம் 12-ம் திகதி காலை சைவாலய பரிபாலகர்களின் மகாநாடொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது நீர்வேலிக் கந்தசாமி கோவில் பரிபாலனசபைத் தலைவரான திரு. மு. பூபாலசிங்கம் கூட்டும் இம்மகாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. இ. சுந்தரலிங்கம் தலைமையில் நிகழும்.

'சைவாலயங்களில் நடைபெற்றுவரும் திருட்டு முதலியவற்றை நீடிக்கவிடாமல் தடுப்பு வேலைகள் செய்து சைவாலயங்களைப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்' என திரு. பூபாலசிங்கம் எல்லா சைவபரிபாலகர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சைவாலயங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் வேறுசில பிரச்னைகள்பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்படுமாம்.

# வீட்டில் கைக்குண்டு சந்தேகநபர் கைது

கோட்டை, வெள்ளி

ஹபரதுவ கிராமசபை அங்கத்தவர் ஒருவரின் வீட்டிலிருந்து 4 கைக்குண்டுகளையும் மணல் நிரப்பப்பட்ட 7 போத்தல்களையும் பொலிசார் கைப்பற்றியிருக்கிருர்கள். இவர் யூ. என். பி. கட்சியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டிருக்கிருர்.

இதேசமயம் 14 கைக் குண்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள தேவகுமாட்டவ அமரவன்ச தேரோவும் மற்றவர்களும் 14-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கக் கேள்விகள்
வவுனியாக் கச்சேரி

என் 1829-1970-5-15-ம் திகதியில் வெளியான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியான 2-6-1970, 1970ம் ஆண்டுயூன் 16-ந் திகதி செவ்வாய்க்கிழமை நடுப்பகல் 12 மணிவரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 1970-6-5-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

GP 2973

அரசாங்க அறிவித்தல்
கூட்டுறவுச் சங்கங்களின்
ஊழியருக்கு பயிற்சி வகுப்புகள்

என் 1832- தமிழ்மொழி மூலமான பின்வரும் பயிற்சி வகுப்புகள் 1-7-1970 தொடக்கம் தமிழ்க் கல்வி நிலையங்களில் நடைபெறும்.

1. கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் - கனிஷ்ட மட்டம்.
2. கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் - சாதாரண மட்டம்.

விண்ணப்பங்கள்:

மட்டக்களப்பு கல்வி நிலையத்தில் சேரவிரும்புவோர் மட்டக்களப்பு கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் முத்திரை ஒட்டப்படாத தங்கள் முகவரி பொறிக்கப்பட்ட காகித உறை ஒன்றை அனுப்புவதன் மூலம் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதி நாள் 15-6-1970.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள கல்வி நிலையங்களுக்கான விண்ணப்பப்படிவங்களை அவ்வப்பகுதிகளிலுள்ள கூட்டுறவு மாவட்ட சமாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கனிஷ்ட மட்டம்

கூட்டுறவு ஊழியர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள். எவ்வாறிருப்பினும் விண்ணப்பகாரர் 7-ஆம் வகுப்பில் தேறியவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயிற்சி வகுப்பின் காலம் 3 மாதங்கள்.

சாதாரண மட்டம்:

கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தேர்வில் தேறியவர்களாகவோ அல்லது கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் கனிஷ்ட மட்டத்தில் தேறியவர்களாகவோ அல்லது வார முடிவு கூட்டுறவு ஊழியர் தேர்வில் தேறியவர்களாகவோ கூட்டுறவு ஊழியர்கள் இருப்பின் அவர்கள் 'டிப்ளோமா' வகுப்புக்குத் தகுதியுடையவர்கள் ஆவார். எவ்வாறிருப்பினும் கூட்டுறவு ஊழியர் தெரிவு செய்யப்பின் இடம் இருப்பின் சிரேஷ்ட தராதரப் பத்திரத்திலோ அல்லது பொதுத்தராதரப் பத்திரத்திலோ (சாதாரண மட்டம்) கணிதத்தில் அல்லது வர்த்தக கணிதத்தில் ஒரு திறமையோடு கூடிய மொத்தம் நான்கு திறமைகள் பெற்றுத் தேறியவர்களின் விண்ணப்பங்களும் கவனிக்கப்படும். பயிற்சி வகுப்பின் காலம் 4 மாதங்கள்.

அதிபர்.

கூட்டுறவுப்பாடசாலை
பொல்கொல்ல, 15-5-1970

GP 2950

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடுகள். 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கு வழிகாட்டிப்படி எல்லாப் பாடங்களுக்கும். இரண்டாம் பருவத்திற்கு மாதிரிகை விஞக்கள், விஞவிடைகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 2277

### கல்வி

ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை/விஞ்ஞானம், (உயர்தரம்) கலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், விசேட ஆங்கிலம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம் பகல்/மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. மகளிர்க்கு தனி விடுதி. யூனிட்டெட் அக்கடெமி, நெல்லியடி.

2274

### நியமனம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உபஅதிபராக கடமையாற்றிய திரு எஸ். கே. தியாகராசா அராலி இந்துக் கல்லூரி அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் முதல் பொறுப்பையேற்றுள்ளார்.


ராணி ஜெய்சங்கர்—கே.ஆர்.விஜயா
(யாழ்ப்பாணம்) நாகேஷ்—வி கே. ராமசாமி
தினசரி 3 காட்சிகள் நடித்த

பெண்ணை வாழ விடுங்கள்

மனோகரா தினசரி 2-30, 6-30 10-00
(யாழ்ப்பாணம்) போயா, பிரிபோயா 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நாகேஷ் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த

பெண்ணை வாழ விடுங்கள்

இப்பொழுது திரையிடப்படுகிறது


# யாழ். நகரில் சேக்கிழார் விழா: கருத்தரங்கு; சிறப்புசொற்பொழிவு

## இம்மாதம் 8-ம், 9-ம் தேதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

அகிலஇலங்கை சேக்கிழார் மன்றம் எடுக்கும் 5-வது சேக்கிழார்விழா இம்மாதம் 8-ம், 9-ம் திகதிகளில்யாழ்ப்பாணம் இந்துக் கல் ூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இராவ் சாகிப் திரு, நல்முருகேச முதலியார் இவ் விழாவில் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவார்:

இவ்விழாவையொட்டி இம்மாதம் 8-ம் தேதி மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து விழா மண்டபம் வரை ஊர்வலம் நடைபெறும். இந்த ஊர்வலத்தில் பஜனை கோஷ்டிகள் கலந்துகொள்ளும்.

9-ம் திகதி பிற்பகல் முன்னாள் கல்வி அதிபதி திருமதி இரத்தினு நவரத்தினம் தலைமையில் கருத்தரங்கம் நடைபெறும். இக் கருத்தரங்கில் செல்வி புஷ்பா செல்வநாயகம், வித்துவான் வ ஆறுமுகம். வித்துவான் பொன் அ கனகசபை, திரு க சிவராமலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

8-ந் திகதி நிகழ்ச்சி நிரல் வருமாறு:

காலை 9-00 பூசை, 9-10 தேவாரம், 9-15 திருமுறை ஓதல் (இராமநாதன் கல்லூரி மாணவிகள், அளவை இசைக்கலைமன்ற மாணவர், யாழ். மத்தியகல்லூரி மாணவர்) 10-00 சொற்பொழிவு- திரு. மு. ஞானப்பிரகாசம், 10-40 திருமுறை ஓதல்- வல்வை சிதம்பராக்கல்லூரி மாணவர், 10-55 திருமுறை ஓதல் யாழ் இந்துக்கல்லூரி மாணவர், 11-10 புராணபடனம் 'சண்டேசுர நாயனர்'- புலவர் திரு. த குமாரசாமிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ த. இரங்கசாமிசர்மா, சங்கீதபூஷணம் சி. விஞசித்தம்பி, 11-40 பூசை, தேவாரம். நண்பகல் 12-00 மகேசுரபூசை, பிற்பகல் 5-00 ஊர்வலம்.

பிற்பகல் 6-00 சேக்கிழார்விழா யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் திரு. ம ஸ்ரீகாந்தா தலைமையில் ஆரம்பமாகும். 6-45 தேவாரம், 6-50 வரவேற்புரை, 7-00 செயலாளர் அறிக்கை, 7-10 தலைமையுரை, 7-25 சொற்பொழிவு - சேக்கிழார் காட்டும் உவமைநயம் - பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, 8-00 சிறப்பு சொற்பொழிவு - சேக்கிழார் தெய்வச் சிறப்பு - இராவ் சாகிப் திரு. நல் முருகேச முதலியார் 9-15 நன்றியுரை, 9-20 தேவாரம்.

9-ந் திகதி நிகழ்ச்சிநிரல் வருமாறு:

பிற்பகல் 3-00 இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் திரு மு. வைரமுத்து தலைமையில் ஆரம்பமாகும். 3-25 தேவாரம், 3-30 திருமுறை ஓதல் (கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள்) 3.50 மாணவர் பேச்சு நாவினுக்கரையன் (செல்வன் பொ. இரகுபதியாழ் இந்துக்கல்லூரி, நம்மைப்பேணும் அம்மை (செல்வி மஞ்சுளா சிவசங்கரநாதன் வேம்படி மகளிர் கல்லூரி) 4-10 திருமுறை ஓதல் - நாவலர் தேவார பாடசாலை மாணவர் 4-30 கருத்தரங்கம். 6-00 பரிசளிப்பு 6-20 வாழ்த்துரை, 6-45 சொற்பொழிவு பெரிய புராணமும் திருமுறைகளும் முதலியார் செ. சின்னத்தம்பி 7-40 (சிறப்புச் சொற்பொழிவு) சேக்கிழாரும் சைவசித்தாந்தமும் இராவ் சாகிப் திரு. நல் முருகேசமுதலியார் 8-45 நன்றியுரை 8-55 தேவாரம் 9-00 நாடகம் வன்ருெண்டர்.

— —

### அமைச்சர்களுக்கு ஆசனங்கள் தயாராகின்றன

கோட்டை, வெள்ளி

புதிய அமைச்சர்கள் யாவரையும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் அரசாங்கத்தின் முன் நிரையில் அமரவைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன. ஆட்சி மன்றத்தில் இவர்களுக்கான ஆசன அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன,

— —

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 6—6—70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்

— —

### சேலம் உருக்காலை விரைவில் தொடங்கும்

சென்னை, ஜுன் 5

சேலம் உருக்காலை திட்டம் சம்பந்தமாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணுநிதியையும், இதர அமைச்சர்களையும் மத்திய உருக்கு இலாகா துணை அமைச்சர் திரு. கே. சி. பந்த் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து, சேலம் உருக்காலையை நிறுவுவதற்கான இடத்தைத் தெரிந்தெடுக்க இம்மாத இறுதியில் ஒரு குழு அமைக்கப்படும்.

இக் குழுவில் மத்திய அரசு அதிகாரிகள், தமிழ் நாடு அரசு அதிகாரிகள், இந்தியப் பூவியல் சர்வே அதிகாரிகள், உருக்காலை ஆலோசனைக் குழுக்களின் பிரதிநிதிகள். ரயில்வே அதிகாரிகள், உருக்காலைக்குப் பயனுள்ளவை எனக் கருதப்படும் ஸ்தானங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இடம் பெறுவர் எனத் தெரிய வருகிறது

நாட்டில் உருக்குத் தொழிலமைப்புக்கு ஆதரவாக உள்நாட்டு நிபுணர்களை பயிற்றுவிக்க ஆய்வு, அபிவிருத்தி அடிப்படையை மத்திய அரசு ஏற்படுத்தும் என்றும், இதனுல் சேலம் உருக்காலை விரைவில் ஏற்பட்டு மாநிலத்தில் நூற்றுக் கணக்கான எஞ்ஞினியர்களுக்கு வேலை கிடைக்கும் என திரு. பந்த் தெரிவித்தார்.

— —

பாடசாலை மாணவர்கள்

### ஆலயபுனரமைப்புக்கு நிதி அன்பளிப்பு

எழுதுமட்டுவாள், வெள்ளி

எழுதுமட்டுவாள் கண்ணகை அம்பாள் ஆலயம் புனரமைப்புச் செய்யப் படவிருக்கிறது. நடேசர் தமிழ் மன்றத்தின் ஆதரவில் இவ் வேலைகள் நடைபெறும். எழுதுமட்டுவாள் நடேசர் தமிழ் மன்றம்

# 'என்ஜினியரை அமைச்சராக்கியது புதிய திருப்பம்' - கூட்டரசுக்குபொறியியல் நிபுணர் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையின் அரசியல் சரித்திரத்திலேயே எந்த ஒரு அரசாங்கமும்இதுவரை செய்திராத ஒரு புதிய முயற்சியை கூட்டணி அரசாங்கம் முதல் முறையாகச் செயற்படுத்தியுள்ளது. ஒரு பொறியியலாளர் விஞ்ஞானத்துறை நிபுணரை அமைச்சர் அவையிலே இடம் பெறச்செய்தது. அரசாங்கத்தின் ஏனைய முயற்சிகளையும் படிப்படியாக முன்னேற்றப்பாதைக்கு இட்டுச்செல்லும் என்பதற்கும் இலங்கை மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்பதற்கும் அறிகுறியாக அமைகிறது''

யாழ் நவீன சந்தைக் கட்டிடத்தைப் பொறுப்பேற்றுள்ள 'மையிற்' பொறியியல் துறை நிறுவனத்தின் அதிபரான கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா புதிய அரசாங்கத்தின் செயல்திட்டங்கள் பற்றிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் பொழுது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

''ஆரம்பத்திலே நான் இந்த அரசாங்கம் எப்படியான செயல்முறைகளைக் கையாளுமோ என்று ஒருவாறு சந்தேகப்பட்டது ஏதோ உண்மைதான். ஆனுல் இப்பொழுது இந்த அரசாங்கம் கொடுத்திருக்கும் செயல்முறைத் திட்டங்களையும் மந்திரி சபைஅமைப்பையும் நோக்கும்போது எமது நாட்டிற்கும் பொது மக்களுக்கும் குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கும் எதிர்காலம் ஒளிமயமாகவே அமையும் என்று திட்டவட்டமாக கூறிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. சிறுபான்மை மக்களுக்கு இந்த அரசாங்கம் நீதிவழங்குவதற்கான பல ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

குறிப்பாக அரசாங்க இலாகாக்களிலே சகலவிஷயங்களும் ஆமைவேகத்திலிருந்து நத்தை வேகத்திற்கு மாற்றிக்கொண்டிருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. இவைகள் என்ன காரணங்கள். என்பனவற்றை ஆராயவேண்டும். இது போன்று அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களை அதாவது மகாவலி திட்டம் போன்ற திட்டங்களையும் ஆராய்ந்து ஆலோசனை கூறி அரசாங்கத்திற்கு உதவிசெய்யஅமைச்சர்சபையிலேஅவசியம் பொறியியல் துறையியல் ஆற்றல் உள்ள

(4-ம் பக்கம் பார்க்க)


மாணவர்கள், ஆசிரியர்கள் வர்த்தகர்கள்

மற்றும்

பல்வேறு தொழிற்துறையில்

ஈடுபட்டுள்ளோருக்கு உபயோகப்படக்கூடிய

'ஸ்கிரிபிலிங் புளக்ஸ்'

(Scribling Blocks)

கீழ்க்காணும் விலையில் விற்பனைக்குண்டு

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1-ம் | நம்பர் | -50 |
| 2-ம் | ,, | 1-00 |
| 3-ம் | ,, | 1-25 |
| 4-ம் | ,, | 1-50 |
| 5-ம் | ,, | 2-00 |

ஈழநாடு

(வர்த்தக அச்சகப்பகுதி)

63, சிவன்கோவில் மேலைவீதி — யாழ்ப்பாணம்.

நீங்கள் வீடு கட்டும் பொழுது

ஒட்டுப் பலகை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடித்த

**பெண்ணை வாழ விடுங்கள்**

இப்பொழுது திரையிடப்படுகிறது

**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்

★ ஜெயலலிதா

★ நாகேஷ் ★ சுந்தரராஜன்

நடித்த

# முத்துச் சிப்பி

இப்பொழுது திரையிடப்படுகிறது


**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா, காலை 10-30)

**எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நாகேஷ் ரெங்கராவ்**

மற்றும் பலர் நடித்த





6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டு பிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம, 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 விளையாட்டு 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

**ராஜா** (யாழ்ப்பாணம்)

Daily 3 Shows
Bobby Darin,
Emily Bank's
in
GUN FIGHT
IN
ABILENE
(cinemas eope & color)

**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி 6-30,10-00

பிரிபோயா,போயா 2-30மணி

சிவாஜி - பத்மினி

நடித்த

**புனர் ஜென்மம்**

**ஸ்ரீ காலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30-10-00 மணி

போயா, பிரிபோயா 2-30

எம். ஜி. ஆர். — மாலினி

நடித்த

**சபாஷ் மாப்பிள்ளை**

**REGAL** JAFFNA

Daily 3 Shows
Poya Prepoya 4 Shows
Hayley Mills
in
THAT DARN CAT

...டிதன் வேம்படி மகளிர் கல்லூரி) 4-10 திருமுறை ஓதல் - நாவலர் தேவார பாடசாலை மலணவர் 4-30 கருத்தரங்கம். 6-00 பரிசளிப்பு 6-20 வாழ்த்துரை, ...0 திருமுறை ஓதல் மகாஜனக் கல்லூரி.

புனரமைப்புச் செய்யப் படவிருக்கிறது. நடேசர் தமிழ் மன்றத்தின் ஆதரவில் இவ் வேலைகள் நடைபெறும். எழுதுமட்டுவாள் நடேசர் தமிழ் மன்றம் இதற்கான பணத்... நன்கொடை வழங்கியுள்ளது.

## ஊழியர்களுக்கு தொழில் அமைச்சரின் வேண்டுகோள்

கோட்டை வெள்ளி

"உயர் பதவியிலிருந்தாலென்ன, சாதாரண ஊழியனாக இருந்தாலென்ன தனது கடமையைச் செவ்வனே செய்யவேண்டும்" என்று தொழில் மந்திரி திரு. எம். பி. டி. இசற் சிறிவர்த்தன தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புககு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

தொழில் இலாகாபௌத்த சங்கம் அமைச்சருக்கு நாரன்பிட்டிய தொழில இலாகா அலுவலகத்தில் வரவேற்பு அளித்தது.

"ஒவ்வொருவரும் தங்களது கடமையை தியாக உணர்வுடன் செய்யும்காலம் வந்துவிட்டது. சகல ஊழியரும் ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும்" என்று அமைச்சர்பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

வண. தங்காலை தேவநந்த தேரோ பேசுகையில், "1956-ம் ஆண்டுக்குப் பின்னர்தான் அரசாங்க இலாக்களில் பௌத்த சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன நாட்டிற்கு நல்லதைச்செய்ய ஒவ்வொரு ஊழியரும் அமைச்சருடன் ஒத்துழைக்கவேண்டும்" என்று கூறினர்.

இலாகா பௌத்த சங்கத் தலைவர் திரு. ஜே பி. ஈ. சிறிவர்த்தனவும் பேசினர்

**பணம் பறிக்கும்**

## நிலக்கிழார்களிடமிருந்து குடியிருப்பாளருக்குவிடுதலை

— வீடமைப்பு அமைச்சர்

கொழும்பு, வெள்ளி

பணம் பறிக்கும் நிலக்கிழார்களிலிருந்து குடியிருப்பாளர் அனுபவிக்கும் கஷ்டம் விரைவில் நீங்கும்எனப் புதிய வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் வீட்டுவாடகைச்சட்டத்தைத் திருத்தியமைக்க முடிவு செய்துள்ளேன், வாடகைக்கு விடப்படும் எல்லாவகை வீடுகளையும் இச்சட்டத்துக்குள் அடக்கும்வகையில் சட்டத்தைத் திருத்தியமைப்பேன்.

இந்நோக்கத்திற்காக இப்பொழுதிருககும் சட்டம் செயற்படுவதை ஆராய்வதற்கும் புதிய சட்டத்தை ஆக்குவதற்கும் ஆலோசனை கூறுவதற்காக ஒரு விஷேட குழுவொன்றும்நியமிக்கப்படும். இதற்குரிய நடவடிக்கையை மிகவிரைவில் எடுப்பதோடு சிலவாரங்களுக்குள் மந்திரிசபையில் புதிய சட்டவிதிகளை சமர்ப்பிக்கவும் தீர்மானித்துள்ளேன்.

புதிய வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யப்படும்

முன்னைய அரசாங்கம் வீடு கட்டுவதற்குகொடுத்து வந்த கடனை நிறுத்தியமையால் வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் கட்டி முடிப்பதில் கவனம் செலுத்தப்படும்

பகிரங்க வேலைப்பகுதியில் பல இளைஞர்கள் பொறியியலாளர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் திறமையுள்ளவர்கள் அவர்களில் எனக்கு முழுநம்பிக்கை உண்டு. இலாகாவில் இவர்கள் சிறப்படைவதற்கு வேண்டிய உதவிகள் யாவும் மிக விரைவில் செய்யப்படும் எனத் தெரிவித்தார்-

வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள எல்லா மக்களதும் ஒத்துழைப்புதனக்குக் கிடைக்குமென நம்பிக்கை தெரிவித்ததோடு, நாடுமுன்னேற 8 மணிவேலை நேரத்தை 9மணி நேரமாகக் கூட்டி வேலைசெய்ய வேண்டுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினர்,

நீங்கள் வீடு கட்டும் பொழுது

# ஒட்டுப் பலகை கதவுகளை பாவித்து



விலையை 40% குறைக்கவும்

விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.

☐ ஒட்டுப் பலகை கதவுகள் பிரமீ குன்றந்நதை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புல்ரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. இரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

**இக்கதவுகள் பாவனையாளுக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்.**

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92903

THUNDER

# கம்போடிய தலைநகரை நோக்கி வியட்காங்கியர் முன்னேற்றம்

நாம்பென், ஜூன் 5

கம்போடியாவில் வியட்காங்கியருக்கும் கம்போடியத் துருப்புகளுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வியட்காங்கியர் ஒரு நகரத்தைக் கைப்பற்றியதுடன் கம்போடியத் தலைநகரான நாம்பென்னை நெருங்கிக்கொண்டிருக்கின்றனர். மூன்று பிரிவாக மூன்று இடங்களில் தலைநகரை நெருங்கிக்கொண்டிருக்கும் வியட்காங்கியர் தலைநகருக்கு 16 கிலோ மீட்டர் தூரத்தில் வந்துவிட்டார்களாம்.

## கேரளத்தில் 1½ லட்சம் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

திருவனந்தபுரம், ஜூன் 5

கேரளத்தில் வேலை நிறுத்தம் செய்யும் ஆசிரியர்கள் வேலைக்குத் திரும்பாதவரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கில்லை என்று கேரள கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

வேலைசெய்யும் நேரத்தை அதிகரிக்கக்கூடாது எனக் கோரி ஒன்றரை லட்சம் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள்.

கேரளத்தில் மொத்தம் பதினோராயிரத்து நூற்றி முப்பத்தி நாலு பள்ளிக்கூடங்களிருக்கின்றன. ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் நேற்று மூடப்பட்டன.

ஆசிரியர்களின் வேலை நேரத்தை அதிகரித்தும் விடுமுறை நாட்களைக் குறைத்தும் கேரள அரசாங்கம் உத்தரவுபிறப்பித்திருந்தது.

— —

## கலவரக் கைதி நகர சபை தலைவர்

ஜால்கான், ஜூன் 5

மராட்டிய மாநிலத்திலுள்ள ஜால்கானில் சமீபத்திலேற்பட்ட வகுப்புக் கலவரம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட லாமன் ராவ் என்பவர் ஜால்கான் நகரசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் இப்போது பிணையில்விடப்பட்டிருக்கிறார். கலவரத்தின்போது கைதான மற்றொரு உறுப்பினர் நகர சபைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பதற்காகப் பொலிஸ்காவலுடன் சபைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்.

— —

‘கூட்டணி

கொரியா

## பத்திரிகையாளர் கைது

சியோல், ஜூன் 5

கொரியா கவிஞரும் பத்திரிகையாளருமான திரு சிகாகிம் தொழில் ரீதியில் எதிர்க்கட்சியுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் அரசாங்கத்தைக் கண்டித்ததாகவும் குற்றம் சாட்டிக் கைது செய்யப்பட்டுள்ளார் என தென்கொரியா செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. மேலும் அச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

‘ஜனநாயக முன்னணி என்ற பத்திரிகைக்கு ஆசிரியாக இருந்த அதே நேரம் திரு சிகாகிம் எதிர்க்கட்சிப் பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்துள்ளார்.

ஐந்து திருடர்கள் என்ற ஒரு வெளியீட்டில் திரு சிகாகிம் மந்திரிமார்கள், உயர்தர அதிகாரிகள சட்டசபை அங்கத்தவர்கள், இராணுவத் தலைவர்கள் ஆகியோரின் ஊழல்களை கண்டித்துள்ளார்.’

— —

## உருவப்படம் களவாடப்பட்டுள்ளது

தஞ்சாவூர், ஜூன் 5

திருவையாற்றிலுள்ள ஸ்ரீ தியாகய்யாவின் சமாதியிலிருந்த அவருடைய திருவுருவப்படம் களவாடப்பட்டுள்ளது. ஆராதனை காலங்களில் இந்தப் படத்தையே தான் ஊர்வலமாக எடுத்துச் செல்வது வழக்கம் இந்தப் படத்தின் திரைச்சீலை சமாதிக்குப் பக்கத்திலுள்ள காவேரிக் கரையில் கிடந்து பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். மேலும் இதுசம்பந்தமாக பொலிசார் புலன்விசாரணை செய்து

## பழம்பெரும் தலைவர்கள் சந்திப்பு

சென்னை, ஜூன் 5

முன்னாள் உதவிப் பிரதமர் திரு மொரார்ஜி கடந்த திங்கட்கிழமை முன்னாள் கவர்னர்ஜெனரல் திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியாரை சந்தித்துப் பேசினார். இருவரும் சுமார் 15 நிமிஷ நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

— —

## குறைகளை முதலில் நீக்குவேன்

கோட்டை, வெள்ளி

புதிதாக நியமனம்பெற்ற இ போ ச தலைவர் திரு. அனில் முனசிங்கா பொறுப்பேற்றுக்கொண்டதும், நாரன்பிட்டியாவிலுள்ள இ போ ச தலைமை அலுவலகத்தில் இ போ ச ஊழியர்களால் சிறப்பான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது.

இவ்வூழியர் மத்தியில் திரு. அனில் முனசிங்கா பேசுகையில் கூறியதாவது:-

முன்னைய நிர்வாகத்தினரால் இ. போ. ச.வில் உருவாக்கப்பட்டிருக்கும் குழப்ப நிலையைச் சீர்படுத்திச்சிறந்த சேவையை ஏற்படுத்துவேன் முன்பு தான் செய்யவிரும்பிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக, திரும்பவும் இ போ சவின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதற்குத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

‘யார் மீதும் பழிவாங்கப்படமாட்டாது. ஆனால் யாராவது நான் நடைமுறைப்படுத்தும் செயல்களுக்கு இடையூறுசெய்தால் யாராயிருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்னைய நிர்வாகம், இ. போ ச வினால் செய்யக்கூடிய நல்ல சேவையை விருத்தி செய்வதற்கு ஒன்றுமே செய்யவில்லை. எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு விரைவில் குறைகளை நீக்குவதே எனது

அரசாங்க ஊழியருக்கு

## விரைவில் உரிமைகள் வழங்கப்படும்

இரத்தினபுரி, வெள்ளி

அரசாங்க ஊழியருக்கு இதுவரைகாலமும் மறுக்கப்பட்டிருந்த அரசியல்உரிமைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் வழங்கவிருக்கிறது.

தனக்கு வரவேற்பளித்துக் கௌரவித்த இரத்தினபுரி தபால் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இரத்தினபுரி ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு நந்தா எலவல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய தேசியகட்சிஅரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு அவர்களது அரசியல்உரிமைகளைக் கொடுக்க மறுத்தது. அவர்களது நலனை அது பூரணமாகக் கைவிட்டதினாலேயே அவ்வாறு செய்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் நலனுக்காகப் பாடுபடும் தொழிலாளிகளுக்கு உதவி செய்வதை விடுத்து முதலாளி வர்க்கத்தினருக்கே கடந்த ஐந்துவருட காலமாக உதவியளித்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாழிகள் அமைதியாகத்தங்கள் கஷ்டத்தை அனுபவித்து வந்து ஈற்றில் பொதுத் தேர்தலில் அவர்களுக்கு நல்லபாடம் கற்பித்துள்ளார்கள். ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொழிலாளர் நலனையேகவனிக்கும் எனக்கூறினார்.

— —

## ‘பொறுப்பை உணர்ந்து நடப்போம்’

பூநகரி, வெள்ளி

எமது தலைவர்தோற்கடிக்கப்பட்டது தமிழினத்திற்கு ஒரு பேரிழப்பாகும் எங்கள் முன்னருக்கும் அநேகபொறுப்புக்கள் உண்டு. நாம் எமது பொறுப்பை உணர்ந்து தமிழினத்தின் நன்மைக்காக கடமையாற்றுவோம் என கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கிளிநொச்சி மக்களால் தமக்கு

# “தூயவர்கள் அனைவரும் எனக்கு துணை நிற்கவேண்டுகிறேன்”

## கருணாநிதியின் பிறந்த நாள் செய்தி

சென்னை, ஜூன். 5

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு மு. கருணாநிதியின் 47 வது பிறந்த நாள் சென்னையிலும் மற்றும் இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது திரு. கருணாநிதியின் இல்லத்துக்குச் சென்று பலரும் அவருக்கு மலர்மாலை சூட்டி பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தனர். 3ந் திகதி காலை திரு கருணாநிதி அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தனது பிறந்த நாளையொட்டி திரு கருணாநிதி விடுத்திருந்த செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

‘என்னுடைய 47 வது பிறந்த நாளை அருமை நண்பர்களும், கழக அமைப்புகளும் தமிழக பெருமக்களும் மிகவும் பெரிதுபடுத்திக் கொண்டாடி எனக்கு வாழ்த்துக்களை வழங்குவது எனக்கே வியப்பாக இருக்கிறது.

செய்யவேண்டிய சாதனைகள் மிகப்பல இருக்கின்றன. அதற்கென தாங்க வேண்டிய சோதனைகளும் ஏராளமாக எதிர் நிற்கின்றன அவைகளை வெற்றிகொள்ளும் வகையில் எனக்கு ஊக்கம் அளிப்பதற்காகத்தான் இந்த பிறந்த நாள் பாராட்டுக்கள் என்று நான் கருதுகிறேன்.

### ஒருமித்த ஆதரவு

நல்லவர்களும், நற்பண்பு கொண்ட பெரியவர்களும், மாற்றுக் கட்சியிலேயிருந்து சற்று கடுமையாகச் சுட்டிக்காட்டுகிற குறைபாடுகளை களைவதில் கவுரவப் பிரச்னை பார்க்காமல் நாள் தோறும் தொண்டாற்றுகிறது கழக அரசு.

அந்த அரசின் தலைமைப் பொறுப்பை சுமந்து கொண்டிருப்பவன் என்ற முறையிலும், அரசு அமைத்துள்ள கட்சியான தி. மு. க. வின் தலைமைத் தொண்டன் என்ற வகையிலும், என்னை ஆளாக்கிய அண்ணா அவர்களின் வழி நின்று பணியாற்ற இந்த நாளில் தமிழக மக்களின் ஒருமித்த ஆதரவை கோருகிறேன்

### வேண்டுகோள்

மாற்றுக் கட்சியினர் சுட்டிக் காட்டுகின்ற குற்றச் சாட்டுகளில் உண்மையிருக்குமானால், அவைகளைக்

மாவட்டந்தோறும் உயர் நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் தமிழில் முதல் எண் வாங்கியுள்ள மாணவ மாணவிகளுக்கு அன்பளிப்பாக நிதியினை அளிக்க, அந்த டிரஸ்டைச் சேர்ந்தவர்கள் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

மிகச் சாதாரணமான என் தோளில் ஏற்றப்பட்டுள்ள பெரும் சுமையினை கல்லும் முள்ளும் காட்டாறுகளும், வன் முறையாளர்களும் நிறைந்த வழியில் சிந்தாமல் சிதறாமல் கொண்டுபோய் சேர்க்க தூயவர் அனைவரும் எனக்கு துணைநிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.”

மேற்கண்டவாறு கருணாநிதி பிறந்தநாள் செய்தி வெளியிட்டுள்ளார்.

## ‘சோசலிச அமைப்பை ஏற்படுத்துவதே நோக்கம்’

கண்டி, வெள்ளி

“முதலாளித்துவ அமைப்பு முறையைமாற்றி, சாதாரண மக்கள் தேவையான பொருள்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சோஷலிச அமைப்பை இந்நாட்டில் ஏற்படுத்துவதே புதிய அரசின் முக்கிய நோக்கம்.”

இவ்வாறு சமூக சேவை அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கூன் கண்டியில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்

இந்நாட்டில் தானொரு மந்திரியாக்கப்பட்ட போதிலும், இப்போதும் பழைய தென்னக்கூனாகவே இருப்பதாக அமைச்சர் கூறினார்.

தனிச்சிங்களத்திலேயே தனது கடமைகளைச்செய்யப்போவதாக திரு. தென்னக்கூன் கூறினார்.

# ‘விவசாயவீரர்களுக்கு நல் வாழ்வு காட்டுக’

பிரதமருக்கு மகஜர்

விஸ்வமடு, வெள்ளி

முன்னைய அரசாங்கம் தமக்கு காணிதருவதாக ஆசை காட்டி கடைசிநேரத்தில் ஏமாற்றி விட்டதென்றும் இதனால் கடைசி நேரத்தில் யு. என். பி யைச் சாராதமற்றக்கட்சிகளுக்கு விவசாயப் படை வீரர்கள் இம்முறை தேர்தலில் தமது வாக்குக்களைப் பிரயோகிக்க நேரிட்டதாகவும் சிங்கள முகாங்களிலுள்ள அதிகமான விவசாயப்படைவீரர்கள் இம்முறை ஐக்கிய முன்னணிக்கட்சியையே ஆதரித்ததாகவும், எனவே விவசாயப்படை வீரர்களுக்கு வருங்காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கைப்பாதையை கூட்டரசாங்கம் காட்ட வேண்டுமென்றும் கோரும் அவசர மகஜர் ஒன்றை ஐக்கிய முன்னணிக்கட்சித் தலைவரும் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டார புதிய அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்துமென நம்புவதாகவும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

— —

## கூப்பன்கள்

விஸ்வமடு, வெள்ளி

இதுவரை கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளாத விஸ்வமடு விவசாயப்படை வீரர்கள் உடனடியாகத் தமது கூப்பன்களை முகாம் அதிபர் திரு. நா. விஸ்வநாதனிடம் பெற்றுக்கொள்ளலாமென்றும், தவறியதாகக் கூறப்பட்ட சில கூப்பன்களும் தலைமைப் பீடத்திலிருந்து இம்முகாமுக்குக் கிடைத்துள்ளதாகவும் சுமார் 100 கூப்பன்கள் தலைமைப்பீடத்திலிருந்து நேற்று இம்முகாமுக்குக் கிடைத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

— —

‘கண்ணியத்துடன்

## “வேற்றுமையை மறப்போம்”

தெரணியகலை, வெள்ளி

“தேர்தல் முடிந்துவிட்டது ஆகையால் அரசியல் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு எனது தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆதரவு நல்குங்கள்”

இவ்வாறு தெஹியோவத்தை எம். பி. திரு. தனபால வீரசேகரா தனது தொகுதிமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

— —

## ‘இன ஒற்றுமைக்கு பாடுபடுக’

பூநகரி, வெள்ளி

பூநகரி கிராமசபைத் தலைவர் திரு. வை. வல்லிபுரம் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பிவைத்தார். ‘சிங்கள-தமிழ் மக்களின் ஒற்றுமைக்குத் தங்கள் அரசாங்கம் பாடுபடவேண்டும்’ என அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கேட்டுள்ளார்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 23-ம் திகதி [6-6-70]

**மேஷம்-** அதிர்ஷ்டகரமான தினம். எத்தொழிலைச் செய்தாலும் அதன் மூலம் தகுந்த வருமானம் கிடைக்கும். விஞ்ஞானத் துறையில் ஈடுபடுபவர்கள் புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குவார்கள்.

**ரிஷிபம்-** தானியத்துறையில் நஷ்டமேற்படுவதற்கு இடமுண்டு. கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டை மூளமுடியும்.

**மிதுனம்-** துன்பத்தின் ரேகைகள் படரும் கொடுக்கல்வாங்கல் மூலம் ஏமாற்றமடையநேரிடும். தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றிமறையும்.

**கடகம்-** இன்று அருளும் பொருளும் இணைந்துகிடைக்கும். தொழில்புரியுமிடத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான தினம்.

**சிம்மம்-** சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். பலவழிகளிலும் பணம் விரயமாகும் உடல்நலத்தைப் பேணுக.

**கன்னி-** பொன்னான சந்தர்ப்பம் இன்று. திறமைக்கு முதலிடம் உண்டு. பெரிய

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மற்றொரு உறுப்பினர் நகர சபைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பதற்காகப் பொலிஸ்காவலுடன் சபைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்.

— —

## 'கூட்டணி ஆட்சிவேண்டும்'

சென்னை, ஜூன் 5

''ஜனநாயகம் பிழைக்க வேண்டுமானால் டெல்லியில் கூட்டணி மந்திரிசபை ஏற்படவேண்டும்'' என்று சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. என். ஜி. ரங்கா கூறினார்.

ஜனநாயகமும், மக்களின் அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டுமானால், டெல்லியில் கூட்டணி ஆட்சிதான் ஏற்படவேண்டும் இதற்கு மக்கள் முழு முயற்சி செய்யவேண்டுமென்று திரு. ரங்கா கூறினார்.

— —

## ரயில் சேவை ஸ்தம்பிதம்

கல்கத்தா, ஜூன் 5

கல்கத்தாவில் டிராம், ரயில் சேவைகள் நேற்றிரவு முதல் ஸ்தம்பித்தன ஊழியர்களின் வேலைநிறுத்தமே இதற்குக் காரணமாகும்.

— —

## பெருவில் மீண்டும் பூமி நடுக்கம்

லீமா, ஜூன் 5

40,000 மக்களைப் பலி கொண்டபின்னரும் கூட பெருநாட்டில் பூகம்பம் திருப்தியடையவில்லை. தலைநகரான லிமாவில் நேற்று மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. உயிர்ச்சேதம் பற்றிய விபரம் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் சில கட்டிடங்கள் இடிந்துவிழுந்தன.

பூகம்பத்தினால் மாண்டவர்களின் சடலங்களை மீட்கும் வேலைகளுக்கும் நிவாரண உதவியளிக்கும் வேலைகளுக்கும் உபயோகப்படுத்துவதற்கு மேலதிகமாக ஹெலிகொப்டர்களைத் தந்துதவுமாறு அமெரிக்காவிடம் பெரு அரசாங்கம் கோரியுள்ளது.

சில இடங்களில் நெருப்புக்காய்ச்சல் பரவத்தொடங்கியிருப்பதைத் தொடர்ந்து நெருப்புக்காய்ச்சல் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டுவருகிறது.

— —

## ஆண்டு நிறைவு

தாவடி, வெள்ளி.

''திருநெல்வேலி நந்தி இசை மன்றத்தின் 1-வது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டம் இம்மாதம் 12-ம் திகதி மேற்படி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

துச் செல்வது வழக்கம் இந்தப் படத்தின் திரைச் சீலை சமாதிக்குப் பக்கத்திலுள்ள காவேரிக் கரையில் கிடந்து பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். மேலும் இதுசம்பந்தமாக பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

— —

## சர்வதேச கூட்டுறவு தினம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

சர்வதேச கூட்டுறவு தின விழாவை வட்டார ரீதியில் அடுத்த மாதம் 2-ந் திகதி கொண்டாட வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை தீர்மானித்துள்ளது. கூட்டுறவுத்தின நிகழ்ச்சிகளில் மக்களிடையேயும் பாடசாலை மாணவரிடையேயும் கூட்டுறவு அறிவைப் பரவச் செய்யக்கூடிய விதமாக கட்டுரை, பேச்சு, கீதம், நாடகம், சுலோக அட்டைகள் புனைதல் என்பனவற்றில் போட்டிகளையும், கருத்தரங்குகள், பிரசாரக் கூட்டங்கள், கூட்டுறவாளர் பவனி என்பனவற்றையும் இடம்பெறச் செய்து சிறப்பாக நடத்துமாறு வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

— —

## அந்தோனியார் திருநாள்

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு, மாதகல், பெரியவிளான், ஊறணி ஆகிய இடங்களில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியார் திருநாளுக்கான நவநாட்கள் நடைபெற்று வருகின்றன இம்மாதம் 13-ந் திகதி திருநாட்பூசை, திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் என்பனவற்றுடன் திருநாள் பூர்த்தியடையும்.

— —

## எக்ஸ்போ 70-ல் பிரதமர் கலந்துகொள்ளார்

கோட்டை, வெள்ளி

பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா ஜப்பானில் நடைபெறும் எக்ஸ்போ -70 இலங்கை தினத்தில் உலகப் பொருட்காட்சியில் கலந்து கொள்ளமாட்டார்.

முன்னைய அரசாங்கம் இந்த மாதத்தில் பிரதமர் எக்ஸ்போ -70-ல் கலந்து கொள்வதற்கு ஏற்பாடுசெய்திருந்தது. ஆனால் புதிய பிரதமர் திருமதி பண்டாரநாயகா இந்த ஏற்பாடுகளை ரத்துச் செய்தார்.

முன்னைய நிர்வாகம், இ. போ. ச வினால் செய்யக்கூடிய நல்ல சேவையை விருத்தி செய்வதற்கு ஒன்றுமே செய்யவில்லை. எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு விரைவில் குறைகளை நீக்குவதே எனது நோக்கமாகும்'

தொழிற்சங்கங்கள் தன்னுடன் ஒத்துழைத்தால் தான் தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

— —

## பருத்திச் செய்கைக்கு உதவுக

யாழ்ப்பாணம், சனி

'உடை சுயதேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அதன் மூலப்பொருளான பருத்தி இந்நாட்டில் அவசரமாக உற்பத்தி செய்யப்பட வேண்டும். பரீட்சார்த்த முறையில் பருத்தி பயிரிடுவதற்கு எமக்குக் காணி தந்து உதவ வேண்டும்.'' எனப் பிரதமரைக் கோரும் தீர்மானம் துணுக்காய் மல்லாவிப் பகுதி கிராமமுன்னேற்றச் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நூல் கிடைக்காத காரணத்தால் பல நெசவு நிலையங்கள் வேலையின்றிக் கஷ்டப்படுவதாகவும், ஐக்கிய முன்னணி அரசாங்கம் இவ்விஷயமாக உடன் பரிகாரம் தேட வேண்டுமென்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் மூலம் பிரதமருக்குத் தீர்மானம் அனுப்பி வைக்கப்படும்.

(குவிம)

— —

கிளிநொச்சியில்

## அமைச்சரை வரவேற்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

ஆட்சிமன்ற விவகார அமைச்சரும் அனுராதபுரம் எம். பி. யுமான திரு. கே. பி. இரத்நாயகாவுக்கு கிளிநொச்சியில் பொதுவரவேற்பளிப்பதற்கு லங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சிக் கிளை ஏற்பாடுசெய்துவருகிறது. கிளையின் உதவிச் செயலாளர் திரு. எஸ். ஐ. ஜோர்ஜ் வரவுக்கான ஆயத்தங்களைக் கவனித்து வருகின்றார்.

கட்சியின் பொதுச்செயலாளரான திரு. ரி. பி. சுபசிங்காவும், திரு. இரத்நாயகாவும் கடந்த வருடம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சிக்கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்தது குறிப்பிடத்தக்கது.

முற்றுக்கும் அநேகபொறுப்புக்கள் உண்டு. நாம் எமது பொறுப்பை உணர்ந்து தமிழினத்தின் நன்மைக்காக கடமையாற்றுவோம் என கிளிநொச்சி எம். பி. திரு வி. ஆனந்தசங்கரி கிளிநொச்சி மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது கூறினர். இக் கூட்டத்திற்கு திரு இ. கிருஷ்ணராசா தலைமை வகித்தார்.

முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இவ் வரவேற்பில் திரு ஆனந்தசங்கரி மேலும் பேசுகையில் தமது தொகுதி மக்களுக்கு கட்சிசார்பற்ற முறையில் தம்மாலான சேவையைச் செய்வதாக உறுதியளித்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பிரதிநிதி திரு ஏ. தியாகராசா பேசுகையில் நாம் எங்கள் கட்சித் தேர்தல்விஞ்ஞாபனத்தில்ஒருசிலவற்றைத் தர விரும்பினால் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுத்துதமிழ் மக்களின் நல்ல திட்டங்களை ஆதரித்து எமக்குப் பாதகமான திட்டங்களை எதிர்ப்போம்.' என்றார்.

நல்லூர் எம். பி சி அருளம்பலம் உட்படப் பலர் உரையாற்றினர்.

— —

## பயனும் சேதமும்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் பல இடங்களில் பெரும்தொகையான பலாக்காய், மாங்காய்கள் இருதினங்களாகப் பெய்த மழையால் சேதமாகிவிட்டன.

மாதம் மும்மாரி கடந்த தை மாதத்திலிருந்து பெய்கின்றது. வயல்களை ஒழுங்காக உழுது பண்படுத்தி இவ்வாண்டு ஆனி, ஆடி மாதத்திலே நெல்விதைப்பதற்கான ஏற்பாடுகளை இப் பகுதி விவசாயிகள் செய்து வருகின்றனர். (குவிம)

— —

## விபுலானந்தர் சிலை

அம்பாறை, வெள்ளி

கிழக்கிலங்கைத் தமிழ்த் தாய்மன்றம் சித்தாண்டியில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் சிலையொன்றை நிறுவவுள்ளது. புல்லுமலைச் சிற்பி திரு. நல்லரெத்தினத்தால் செதுக்கப்பட்ட இச்சிலை தற்போது மக்கள் பார்வைக்காகச் சித்தாண்டி முருகன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை தமிழ்த் தாய்மன்றப் பிரமுகர் ஒருவர் இச்சிலை விரைவில் உரிய இடத்தில் நிறுவப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

ளின் ஒருமித்த ஆதரவை கோருகிறேன்

### வேண்டுகோள்

மாற்றுக் கட்சியினர் சுட்டிக் காட்டுகின்ற குற்றச்சாட்டுகளில் உண்மையிருக்குமானால், அவைகளுக்குக் காரணமானவர்கள் ஒரு வேளை கழகத் தோழர்களில் சிலராக இருப்பார்களேயானால், அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய பிறந்த நாளில் நான் விடுக்கின்ற மிகுந்த பணிவன்பான வேண்டுகோளாகும்.

எனது பிறந்த நாளை முன்னிட்டு இன்றுஏற்பாடு செய்துள்ள விழாக்களில் நான் கலந்துகொள்ளவில்லை. சென்ற ஆண்டு கடற்கரை கூட்டத்தில் நான் அறிவித்தது போல், என் பிறந்த நாளையொட்டி உருவாக்கப்பட்டுள்ள 'அண்ணா டிரஸ்ட்' வாயிலாகவோ, அல்லது வேறு முறையிலோ பொது காரியங்களுக்காக பணமுடிப்பு அளிக்கப்படுகிற இரண்டொரு விழாக்களில் மட்டும் நான் சென்னையில் கலந்து கொள்வதாக இருக்கிறேன். அப்படி வழங்கப்படுகிற நிதியினையும் உடனடியாக உரிய நற்காரியங்களுக்காக அப்போதே அளித்துவிடவிருக்கிறேன்.

### துணை

சென்ற ஆண்டு அமைந்த அண்ணா டிரஸ்ட் மூலம், இந்த ஆண்டு தமிழகத்தில்

## ''நல்வாழ்வுக்கே புராணப்படிப்பு''

யாழ்ப்பாணம், சனி.

''இத்தகைய புராணங்களைப் படிப்பதும், கேட்பதும் மனிதனுடைய நல்வாழ்வுக்கே. இறைவனுக்கும் இறைவிக்கும் நடைபெற்ற விவாகச் சடங்குகளை மனிதனுக்கு என்றே வாழ்வாங்கு வாழச் செய்தது. கடவுள் எங்கும் நிறைந்தவர், எதிலும் விருப்பு வெறுப்பற்றவர்''

இவ்வாறு நேற்று தெய்வானையம்மன் கலியாண விழாவில் பிரதம உரையாசிரியராகக் கலந்து கொண்ட வித்துவான். ஆறுமுகம் விழாவில் கூறினர். அரசடி திரு. சின்னத்துரை புராணம் வாசித்தார். மீசாலைப் பிள்ளையார் கோயிலில் தொடர்ந்து பலநாட்களாகப் படித்து வரும் கந்தபுராணப் படிப்பின் டிஷ விழா திரு. சிவசம்பு, திருமதி உமையம்மா ஆகியோர் 'கிரியை முறை' தெத்தம் செய்து நடைபெற்றது. பிரமஸ்ரீ. எஸ். சிதம்பரநாதக் குருக்கள் விசேட பூஜை செய்தார்.

(குவிம)

நல்ல வாழ்க்கைப்பாதையை கூட்டரசாங்கம் காட்ட வேண்டுமென்றும் கோரும் அவசர மகஜர் ஒன்றை ஐக்கிய முன்னணிக்கட்சித் தலைவரும் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு விஸ்வமடு விவசாயப்படை வீரர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

விவசாயப்படை முகாம்கள் இயங்குவதனால் எத்தனையோ வாலிபர்களுக்கு வேலைகிடைத்திருக்கிறதென்றும், இந்த விவசாயப் படை வேலைவாய்ப்புத் திட்டத்தை இன்னும் விஸ்தரித்தால் நாட்டிலுள்ள வேலையில்லாத்திண்டாட்டம் அறவே ஒழிந்துவிடுமென்றும் உயிர்வாழ்வுக்குத் தேவையான உணவுற்பத்திக்கு முதுகெலும்பாக இருக்கும் விவசாயப் படைவீரர்கள் விஷயத்தில்

கூ. மொ. வி.

## பூரணமாற்றம் ஏற்படும்

கோட்டை. வெள்ளி

'கறுப்புச் சந்தைக்காரர்களிடமிருந்து கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை விடுவிக்க நான்உடனடியாக நடவடிக்கை எடுக்க விருக்கின்றேன்.'

கூட்டுறவுமொத்தவிற்பனவைச் சேர்ந்ததொழிற்சங்கங்கள் தமக்களித்த வரவேற்பின்போது உரையாற்றிய கூட்டுறவுமொத்த விற்பனை இலாகாவின் புதிய அதிபர் திரு. ஆர். ஐ. ஒபேசேகரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூட்டுறவு மொத்தவிற்பனவு இலாகாவின் உயர்தர அதிகாரிகளின் சொற்படி நிர்வாகத்தை நடாத்த நான் விரும்பவில்லை. இங்கு தொழில் புரியும் ஊழியர்கள் தங்கள் ஒத்துழைப்பை எனக்கு அளிக்க வேண்டும். உங்களின் உதவியுடன் தான் நிலைமையைச் சீர்செய்ய முடியும். இ. போ. ச. கூ. மொ. விற்பனை ஸ்தாபனம் போன்றவைகளாலேயே மக்கள் அதிக நன்மைகளைப் பெறலாம். விரைவில் கூ. மொ. விற்பனவு ஸ்தாபன நடை முறையை ஆராய்ந்து அவற்றில் முக்கியமான மாற்றங்களைச் செய்வேன் எனக் கூறிய திரு. ஒபேசேகரா தான் இந்தப்பதவியை எடுத்தது அதன் மூலம் வருவாயைப் பெறவல்ல கூ. மொ. விற்பனை ஸ்தாபனத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் உதவிசெய்வதற்காகவே எனக்குறிப்பிட்டார்.

துள்ளதாகவும் சுமார் 100 கூப்பன்கள் தலைமைப்பீடத்திலிருந்து நேற்று இம்முகாமுக்குக் கிடைத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

— —

## 'கண்ணியத்துடன் நடப்பேன்'

யாழ்ப்பாணம், வெள்ளி

'நான் ஆட்சி மன்றத்தில் கண்ணியத்துடன் நடக்கப் பிரார்த்திக்கிறேன்''

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தியாகராசா கொழும்பு செல்லும் போது யாழ். புகையிரத நிலையத்தில் வழியனுப்ப வந்த வட்டுக்கோட்டைத் தொகுதிப் பொதுமக்கள்மத்தியில் கூறினர்.

(கு. வி. ம)

— —

## அந்தரங்கக் காரியதரிசி

கோட்டை, வெள்ளி

கல்டுமுல அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ். ஹேமதாஸ சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு பி. ஜி. ஆரியதாசாவின் அந்தரங்க காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்'

— —

## கடும் புயலும் மழையும்

விஸ்வமடு, வெள்ளி

நேற்று இரவு விஸ்வமடுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக கடும்புயலும் மழையும் ஏற்பட்டது. இதனால் இப்பகுதியில் உள்ள பெரிய காட்டு மரங்களும், விவசாயிகளின் வாழைத் தோட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பதட்டநிலை தென்படும். பலவழிகளிலும் பணம் விரயமாகும் உடல்நலத்தைப் பேணுக.

**கன்னி-** பொன்னான சந்தர்ப்பம் இன்று. திறமைக்கு முதலிடம் உண்டு. பெரியவர்களின் ஆதரவு, தொழில் துறையில் புதிய வெற்றி.

**துலாம்-** புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரவழியால் புகழுண்டு. குறிக்கோளில் வெற்றி உண்டு. ஆனந்தநிலை.

**விருச்சிகம்-** கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். போக்குவரத்து விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். பேச்சைக் குறைக்கவும்.

**தனுசு-** இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும். சுமுகமான தினம்.

**மகரம்-** இதயத்தில்அமைதியும் ஏற்படும், பிதாவழி மூலம் நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்கசமயத்தில் ஆதரவுதருவர்.

**கும்பம்-** இன்று முன்னணியில் நிற்பீர்கள். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றி கிடைக்கும், இலட்சியவாதிகளுக்கு பொன்னானதினம்.

**மீனம்-** அபிப்பிராயபேதங்கள். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், பந்துக்கள் ஆதரவு பெருகும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க.வேலுப்பிள்ளை

## 'ஸ்ரீமா உதவி பெற்று என்னலானதைச் செய்வேன்'

### நல்லூர் எம். பி. நம்பிக்கை

தாவடி, வெள்ளி

''சிறுபான்மைத் தமிழர் என்ற பாகுபாடு எள்ளளவு கூட என் மனத்தில் இல்லை, சிறுபான்மை மக்களை எனது சகோதரர் என்ற எண்ணத்துடன்தான் இதுவரைகாலமும் நேசித்துவந்திருக்கிறேன்; வருகின்றேன்' இம்முறை எனக்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிய சிறுபான்மைத் தமிழ் சகோதர மக்களுக்கு எனது நன்றிகள்.''

இவ்வாறு நல்லூர்த் தொகுதி புதிய எம். பி யான திரு. சி, அருளம்பலம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கோண்டாவில் புகையிரத நிலையத்தில் வழியனுப்பிவைக்கப்பட்டார்:

ஆதரவாளர்கள் பலர் மலர்மாலைகள் அணிவித்துக் கௌரவித்தபோது நன்றி தெரிவித்துப் பேசுகையில் திரு. அருளம்பலம் மேலும் கூறியதாவது:-

''காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி, பண்டாரநாயக்கா அகில இலங்கைக் கிராமக் கமிட்டிகளின் தலைவராக இருந்த காலத்தில் நான் அக்கமிட்டியின் காரியதரிசியாக இருந்து பணி புரிந்துள்ளேன். இதனால் திரு. பண்டாரநாயக்காவுடன் பழகிய நட்புரிமையைக்கொண்டு அவருடைய மனைவி ஆட்சிபீடத்திலமரும் சந்தர்ப்பத்தில் தமிழினத்திற்கு அவர் மூலமாக நன்மைசெய்யமுடியுமென்று நான் நம்புகிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மனச்சாட்சியின் குரலே ஆண்டவனின் குரல். ஒவ்வொரு எண்ணமும் சரியா என்று அறுதித் தீர்ப்பு வழங்குவது அதுதான்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 23-ந் திகதி (6-6-70)

## பத்திரிகை சபை

இலங்கையிலுள்ள பத்திரிகைகளை அரசாங்கம் கைப்பற்றப் போவதில்லை என்று நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். ஸ்ரீமாவோவின் முந்திய மந்திரிசபை இதே பிரச்னையின் மீது தான் முறிந்தது. ஜனநாயக வெற்றிக்கு பத்திரிகைச் சுதந்திரம் அவசியமென்றும், பத்திரிகைகளை அரசாங்கமே கைப்பற்றி நடத்துவதாயின் எதேச்சாதிகாரமே நாட்டில் தாண்டவமாடி ஜனநாயகம் குலைந்துவிடலாமென்ற காரணத்தின் மீது பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு முடிவில் ஸ்ரீமாவோவின் அரசாங்கமே கவிழ்ந்தது. அந்தப் பெரிய பாடம் மறக்க முடியாதது. இப்போது பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு அசைக்கமுடியாத பெரும்பான்மைப்பலம் இருப்பதால், தாங்கள் நினைத்த எந்தச் சட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ளமுடியும். என்றாலும் அவ்விதம் செய்யாமல், பத்திரிகைச் சுதந்திரத்தின் அவசியத்தை உணர்ந்து, பத்திரிகைகளைக் கைப்பற்றுவதில்லை என்று அவர்கள் தீர்மானித்துள்ளது பாராட்டத்தக்கதாகும்.

அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி அவ்வப்போது குணதோஷங்கள் கூறப்படவேண்டுமென்றும், அவ்விதம் யாரும் குறைகூற முடியாத நிலை தமக்குப் பிடிக்காதென்றும் டாக்டர் என். எம். கூறியுள்ளதிலிருந்து பத்திரிகை சுதந்திரம் நீடித்திருக்கவேண்டிய அவசியத்தைக் காட்டுகின்றது. பத்திரிகைகள் தான் பொதுமக்களின் குரல். பார்லிமெண்ட் சபையில் எதிர்க் கட்சியினர், அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி குறைகுற்றங்கள் கூறலாமென்றாலும், அச்சபை தொடர்ந்து இயங்குவதில்லை மேலும் எதிர்க்கட்சியினருள்ளிட்டு, பார்லிமெண்ட்சபை அனைத்துக்கும் மக்களின் உண்மை, பத்திரிகைகள் மூலம் அம்பலமாகிவிடுமென்ற அச்சம் இருந்தால்தான், நிர்வாக அதிகாரிகளும் அதிக நேர்மையாகவும் கவனமாகவும் இருப்பர்.

இதேசமயம் சில பத்திரிகைகள், சுதந்தரம் என்ற பெயரில், வகுப்புத்துவேஷத்தைக் கிளப்பிவிடக்கூடியதாக எழுதலாம். எழுதியும் வந்துள்ளன சென்ற 1958-ம் வருட வகுப்புக் கலவரங்களுக்குச் சில பத்திரிகைகள் செய்த விஷமப் பிரசாரமே காரணம் என்றும் சொல்லலாம். ஆகவே தங்கள் சுதந்திரத்தை பத்திரிகை இவ்விதம் துஷ்பிரயோகம் செய்யாமல் தடுக்கவும் பத்திரிகைகள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடுகளை செய்துகொள்ளவும், இந்தியா, பிரிட்டன் முதலிய நாடுகளில் உள்ளதுபோல், ''பத்திரிகை கவுன்ஸில்'' என்பதனை இங்கு அமைக்கலாமென்று அமைச்சர் பெரேரா கருதுகின்றார் அவ்வித சபையை அமைத்து பத்திரிகைகள் நல்லமுறையில் நடைபெறச் செய்வது பலவிதங்களிலும் நல்லதாகும்.

சுதந்தரமான சிறிய பத்திரிகைகளுக்கு சங்கடங்கள் அதிகம். காகித விலை, முன்னிருந்ததைவிட சுமார் இரட்டிப் பாகியுள்ளதால் சிறிய பத்திரிகைகளுக்கு எவ்வளவு கஷ்டமென்பதை விளக்கத் தேவையில்லை. மேலும் விளம்பரங்கள் விஷயத்தில் சில பத்திரிகை ஸ்தாபனங்களே ஏகபோகமான சலுகைகள் பெற்று வந்துள்ளன. இன்றும் சுதந்திரமான சிறிய பத்திரிகைகளுக்கு எவ்வளவோ குறைகளுண்டு. ''பத்திரிகை கவுன்ஸில்'' அமைக்கப் பெறுவதுடன் பிரதமரும் அடிக்கடி பத்திரிகை பிரதிநிதிகளை எல்லாம் அழைத்துப் பேசி, பத்திரிகைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டால், இங்கு பத்திரிகைகள் தங்கள் ஜனநாயகக் கடமைகளை மேலான

# சிறிமா - இந்திரா அரசுக்களின் நேச உறவுகள் வளருமா?

## சி. பி. ஏ. விமர்சனம்



ஸ்ரீமா அரசாங்கம் பதவியேற்றிருப்பதைத் தொடர்ந்து இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் இருந்து வரும் உறவுகள் மேலும் இறுக்கமாகுமா அல்லது பாதிக்கப்படுமா என்பதுபற்றி பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

திருமதி இந்திராகாந்தியும் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவும் நெருங்கிய நண்பர்கள் எனவே இருநாடுகளுக்கிடையிலும் நேச உறவுகள் மேலும் இறுக்கமுறும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இருநாடுகளுமே உறுதியான நடுநிலைமைக்கொள்கையைக்கடைப்பிடிப்பதால் வெளிநாடுகளுடனான உறவுகள் விஷயத்தில் விசேஷ முன்னேற்றம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கலாம். இந்த விஷயத்தில் முன்னைய சேனநாயக்க அரசு ஓரளவுக்கு மேற்கு நாடுகளுக்கு சார்பான கொள்கையை அனுஷ்டித்து வந்தது.

இந்தநாட்டிலுள்ள இந்திய இனத்தவர் பிரச்னையைப் பொறுத்தவரையில் புதிய அரசு 1964-ல் ஏற்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ''சொல்லிலும் உணர்விலும்'' நிறைவேற்றுவதற்கு உறுதிபூண்டிருக்கின்றது. அதாவது பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்துள்ள தகுதியான மனுதாரர்களுக்கு விரைவாக குடியுரிமை வழங்குவதையும், மனுநிராகரிக்கப்பட்டவர்களை கூடிய விரைவில் அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதையே இது குறிப்பதாகக் கருதப்படுகின்றது.

தேர்தல் பிரசாரங்களின் போது, ஒப்பந்தத்தில் உள்ள திருப்பி அனுப்பப்படுவதற்கான அம்சத்தை அமுல் நடத்தாமல் சேனநாயக்க அரசாங்கம் ஒப்பந்ததத்தைக் குலைக்க முயன்றதாக திருமதி பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்தானதின் பின்னர் வருடத்துக்கு 35,000 ரூபாவீதம் இதுவரைக்கும் 182,500 பேர் திருப்பியனுப்பப் பட்டிருக்கவேண்டும். ஆனல் இந்திய ஹைகமிஷன் புள்ளி விபரங்களின்படி 30,000 க்கும் சற்று அதிகமானவர்கள் தான் போய்இருக்கிறார்கள்.

ஒப்பந்தத்தின்படி இலங்கையிலுள்ள பத்துலட்சம் இந்திய இனத்தவரில் 525,000 பேரை இந்தியா திருப்பியழைத்துக் கொள்ளவேண்டும். இலங்கை அரசு 300,000 பேருக்கு குடியுரிமை வழங்கியாகவேண்டும். எஞ்சியுள்ளவர்களின் 'தலைவிதியை' பின்னர் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் போது நிர்ணயிப்பது என்று புதுடில்லியில் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கும் ஸ்ரீமா பண்டாரநாயக்காவுக்குமிடையில் 1964-ல் கைச்சாத்தான ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுவரைக்கும் அப்படியான பேச்சுக்கள் எதுவும் நடைபெறவில்லை.

### பிரஜைகளாவோர் பெருநன்மை பெறுவர்

இலங்கை பிரஜாவுரிமை பெறுகிறவர்கள் புதிய அரசாங்கத்தினுல் நல்ல முறையில் நடத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

தோட்டங்களில் ஆறுநாட்கள் வேலைகிடைக்கவும், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டத்துக்கு வெளியில் வேலைகள் பெறுவதற்கும் தோட்டப் பாடசாலைகளைப் பொறுப்பேற்று தேசியக் கல்வி அமைப்பில் சேர்த்துக் கொள்ளவும் தோட்டத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் 'லைன்' களிலிருந்து வெளியேற்றுவதற்கு அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றம் சாட்டி முதலாளிகள் வழக்குத் தொடர்வதைத்தடுப்பதற்கும். தொழிற்சங்க தலைவர்கள் அங்கத்தவர்களைச் சந்திக்க தோட்டங்களுக்குள் செல்ல அனுமதிப்பதற்கும், தொழிலாளர் உரிமை சாஸனத்திற்கமைய தொழிலாளர் சட்டங்களைத்திருத்தி சிறந்தமுறையில் தொழில் சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கும் இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பதற்கு உறுதிபூண்டிருக்கின்றது.

### வர்த்தகத்துறையில் பெரும் பாதிப்பு

வர்த்தகத்துறையிலும், முதலீட்டுத்துறையிலுமே இந்திய அரசு பெரிதாகப் பாதிக்கப்படலாம் என்று தெரிகின்றது. அத்தியாவசிய சில்லறை உணவுப் பொருட்கள் சம்பந்தமான வர்த்தகத்தை அரசாங்கமே மேற்கொள்வதற்கு முடிவு செய்திருக்கின்றது. இதனுல் இப்பொழுது இந்த வர்த்தகத்தில் ஏகபோகமாக ஈடுபட்டுள்ள பல இந்தியர்கள் பாதிக்கப்படலாம். இந்தியாவுடனான வர்த்தகம் இதுவரை அந்தி நாட்டுக்கே சாதகமாக இருந்து வந்துள்ளது. இந்த விஷயத்தில் இலங்கைக்கு அதிக வர்த்தகலாபம் கிடைக்கும் வரையில் எல்லா நாடுகளுடனுமான வர்த்தக ஒப்பந்தங்களைப் பரிசீலனை செய்யப் போவதாக புதிய வெளிவர்த்தக அமைச்சர் திரு ரி.பி. இலங்கரத்தின குறிப்பிட்டிருக்கிறார்,

நெசவு மற்றும் பல தொழில்துறைகளில் இந்தியா முதலீடு செய்துள்ள அம்சங்களை அரசு பரிசீலனை செய்யும். வெளியார் முதலீடு செய்துள்ள எல்லாத் துறைகளையும் பரிசீலனை செய்யப்போவதாக கைத்தொழில் அமைச்சர் திரு ரி. பி, சுபசிங்க திட்டமிட்டிருககின்றார்,



இலங்கையர் மயமாக்கும் புதிய அரசின் திட்டமும் வெளிநாட்டு வர்த்தக முதலீடுகளைப் பாதிக்கக கூடும் வெளியார் கம்பனிகளில் பங்குகளை வாங்குவதற்கான திட்டமொன்றை அரசு கொண்டு வரவிருக்கின்றது,

இந்திய திரைப்படத் தொழில் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என்று கருதலாம், இந்திய திரைப்படத் தொழில் இலங்கையை இதுவரைகும் பெரிய சந்தையாகப் பாவித்து வந்திருக்கின்றது, உள்ளூர்த் திரைப்பட உற்பத்திக்கு ஊக்கமளிப்பதன் மூலம் திரைப்பட கமிஷன் சிபாரிசுகளை அமுல் நடத்தவும் இத்தொழிலை வெளிநாட்டுஏகபோகத்திலிருந்து பாதுகாப்பதற்கு அரசு திடம் கொண்டிருக்கின்றது.

இன்டியன்பாங்க்இன்டியன் ஓவர்சீஸ் பாங்ச் ஸ்டேட் பாங்க் ஒப் இன்டியா ஆகிய மூன்று இந்திய வங்கிகளும் தேசஉடைமையாககப்படும் இவைகளுடன் ஐந்து பிரிட்டிஷ் வங்கிகளும் ஒரு பாகிஸ்தானிய வங்கியும் தேச உடமையாகும். (சி பி ஏ)

## கொக்குவில் ஆச்சியார்



நெற்றியிலே திருநீறு. அருளொளி வீசும் நிறைந்த முகம். சிவத்தொண்டினுல் தேய்ந்து ஒடிந்த சடலம். தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் சிவப்பணிக்கே அர்ப்பணித்து தமது 83-வது வயதிலே பல்லோரும் ஏற்றப்பணிந்து காரைக்கால் அம்மையார் போல் சிவனடிக்கீழ் சேர்ந்தார் கொக்குவில் ஆச்சி எனும் அமிர்தவல்லி அம்மையார்.

புகழ்பெற்ற தமிழ்ப் பண்டிதர் சோமாஸ்கந்தரை மணந்து, இளம்வயதிலேயே அவரை இழந்தபின், அவர் வாழ்க்கை எல்லாம் தவ வாழ்க்கையாக மாறியது பிரார்த்தனை, ஜபம், கோயில் திருப்பணி, ஈசுவர தரிசனம் இவற்றுக்கே தம்மை முற்றிலும் அர்ப்பணித்துக்கொண்டார். நமது சைவம் பல கடும் சோதனைகளையும் வென்று இன்னும் தலைநிமிர்ந்து இருக்கின்றதெனின் அதற்குக் காரணம் இத்தகைய மங்கையர்க்கரசிகளின் அரும் பெரும் தொண்டேயாகும். கொக்குவில் மாத்தனை முருகமூர்த்தி கோயிலில் ஸ்ரீ நடராஜப்பெருமானை பிரதிஷ்டை செய்து, மண்டபம் கட்டி, கும்பாபிஷேகமும் நடத்தி தினசரி பூசை நடக்க உடல்நலமற்ற ஒரு மூதாட்டியால் செய்யமுடிந்ததெனின் அது அவரது தவசக்தியின் பயனும் இறைவனின் அருளுமே என்பதில் சற்றும் ஐயமில்லை. அக்கோவிலை மேன்மேலும்கட்டி பூரண திருப்பணிகள்செய்து பூசை, திருவிழாக்களை சிறப்பாக நடத்தி, அந்த ஊர் மக்கள் மட்டுமன்றி பலரும் திருவருள் பெற்று உய்யவண்டுமென்பதில் அவ்வம்மையாருக்குத்தான் எவ்வளவு ஆர்வம்! கண்ணீர் விட்டுக் கசிந்து உருகி, சிவப்பணி செய்த கொக்குவில் ஆச்சியார் ஈழத்து சைவப் பெண் குலதிலகங்களில் ஒருவராவார். அவரது ஆத்மா, சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடேசப்பெருமான் பொன்னூர் திருவடியில் என்றும் இன்பம் திளைத்துநின்று நம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி, உய்விக்க உதவுமாக!

(இன்று அவரது அந்தியேட்டித் தினமாகும்)


—ஐயாறன்

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து, பங்கத்தைப் போக மாற்றி பாவித்தேன் பரமா உன்னை, சங்கொத்த மேனிச் செல்வாசாதல்நாள் நாயேன்

## 38 ஆண்டு சேவை

உரும்பராய், வெள்ளிவலி கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவருள் ஒருவரான தலைமையாசிரியர் திரு சி. கந்தசாமி 38 ஆண்டுகால ஆசிரிய சேவையின்பின் இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார்.

முப்பது ஆண்டுகள் உதவி ஆசிரியராகவும்ஐந்து ஆண்டுகள் தலைமையாசிரியராகவும் பணிபுரிந்தவரான திரு கந்தசாமி பிரபல தமிழறிஞர்களைத் தந்த மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.



இப்பொழுதுவாதரவத்தை விக்னேசுவர வித்தியாலயத்தில் தலைமையாசிரியராகப் பணிபுரியும் இவர் இம்மாத முடிவில் தமதுசேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்,

வாதரவத்தை விக்னேசுவர வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய தன்மூலம் குறித்த கிராமத்துக்குப் பல முன்னேற்றமான பலன்களை வளரச் செய்தார். பிரபல சமூக சேவை ஊழியரான ஆசிரி

ஆட்சி மன்ற திறப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் எதிர்க் கட்சியினர். அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி குறைகுற்றங்கள் கூற லாமென்றாலும், அச்சபை தொடர்ந்து இயங்குவதில்லை மேலும் எதிர்க்கட்சியினருள் ளிட்டு, பார்லிமெண்ட்சபை அனைத்துக்கும் மக்களின் சங்கடங்களை பகிரங்கமாக எடுத்துக் கூறி நிவாரணம் தேடும் பெரும் பணியை சுதந்திர பத்திரிகைகள் தான் செய்யமுடியும்.

பெறுவதுடன் பிரதமரும் அடிக்கடி பத்திரிகை பிரதி நிதிகளை எல்லாம் அழைத்துப் பேசி, பத்திரிகைகளு டன் நெருங்கிய தொடர்பு கொண்டால், இங்கு பத்திரிகைள் தங்கள ஜன நாயகக் கடமைகளை மேலான முறையில் செய்யவும் பொது மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து நாடும் அமைதியாக முன்னேறவும் முடிவதாக இருக்கும்.

யான மனுதாரர்களுக்கு விரைவாக குடியுரிமை

...பிள்ளைகள் தோட்டத் து... வெளியில் வேலைகள்

அம்சங்களை அரசு ப...லனை செய்யும். வெளியார் முத

தானிய வங்கியும் தேச உடமையாகும். (சி பி ஏ)

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து, பங்கத்தைப் போக மாற்றி பாவித்தேன் பரமா உன்னை, சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை எங்குற்றாய் என்ற போதில் இங்குற்றேன் என் கண்டாயே.

—அப்பர் அடிகள்

...வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய தன்மூலம் குறித்த கிராமத் துக்குப் பல முன்னேற்ற மான பலன்களை வளரச் செய்தார். பிரபல சமூக சேவை ஊழியரான ஆசிரி யப் பெருந்தகை பல்லாயி ரக் கணக்கான மாணவர் களின் உள்ளங்களில் நிலை யான தூய இடத்தைப் பெற்றார் என்றால் மிகையா காது.

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய இருபத் தைந்து ஆண்டுகளும் அவ ரது ஆசிரிய வாழ்வில்குறிப் பிடத்தக்க பொற் கால மாகும்.

திருநெல்வேலி [illegible] சைவா சிரிய பயிற்சிக் கலாசாலை யில் ஆசிரியராகப் பயிற்சி பெற்றவரான திரு கந்த சாமி பிறந்த ஊராகிய மட்டுவிலிலும் கடமையாற் றிய ஊர்களிலும் ஆற்றிய சைவத்தமிழ்ச் சேவைகள் மிகவும் உன்னதமானவை.

### ஆட்சி மன்ற திறப்பு விழா

# பொதுமக்களும் தாராளமாக பார்த்து மகிழ வசதி

புதிய அரசின் கோலாகல மான ஆட்சிமன்ற திறப்பு விழாவில் பொதுமக்களும் தாராளமாகக் கலந்து கொள்வதற்கு வசதியிருக் கும். திருமதி பண்டார நாயக்கா அரசாங்கத்தைப் பதவிக்கு அனுப்பிய சாதா ரண மனிதனும் இந்த விழா வில் கலந்துகொள்வதற்கு வசதிசெய்யும் வகையில் ஏழாவது ஆட்சிமன்ற அங்கு ரார்ப்பண வைபவத்திற் கான இடம் மாற்றப்பட் டுள்ளது.

ஆட்சிமன்றம் மார்ச் 25ம் திகதி கலைக்கப்பட்டு புதிய ஆட்சிமன்றம் ஜூன் 7-ம் திகதி ஆரம்பமாக வேண்டுமென்று தேசாதி பதியின் பிரகடனம் கூறு கின்றது. இத்தினத்தில் ஆட்சிமன்றக் கட்டிடத்தில் இரு சபைகளினதும் (மக் கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை) இணைப்புக் கூட்டத்தில் மகாதேசாதி பதி சிம்மாசனப் பிரசங் கத்தை நிகழ்த்துவதாக இருந்தது. ஆனால், இந்த வைபவத்தை கொழும்பு சுதந்திர மண்டபத்தில் ஜூன் 14-ம் திகதி நடத் துவதென்று இப்பொழுது முடிவுசெய்யப்பட்டுள்ளது. இனால் ஏராளமான பொது மக்களும் சுதந்திர சதுக்கத் திலிருந்து இந்த வைபவத் தைக் கண்டு மகிழ்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. 1948ல் குளோசெஸ்டர் பிரபுவினால் முதலாவது ஆட்சிமன்றம் சம்பிரதாயச் சடங்குகளு டன் ஆரம்பித்துவைக்கப் பட்டதற்குப்பின்னர் சுதந் திரச்சதுக்கத்தில் ஆட்சி மன்ற ஆரம்பவிழா நடப் பது இதுவே முதல்தடவை.

இருந்தபோதிலும் மக் கள் பிரதிநிதிகள் சபை திட்டமிட்டபடி ஜூன் 7 ம் திகதி கூடவிருக்கின்றது. அன்றி சபாநாயகர் தெரி வும் அங்கததவர்கள் சத்தி யப்பிரமாணம் செய்தலும் இடம்பெறும்.

முன்னாள் ராணுவத் தள பதி மேஜர் ஜெனரல் றிச் சார்ட் உடுகம சபாநாயகர் பதவிக்குத் தெரிவுசெய்யப் படலாமென்று எதிர்பார்க் கப்படுகின்றது. முஸ்லிம் ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் ஐ ஏ காதர் துணை சபாநாயகராகத் தெரிவாக லம்

திருமதி பண்டாரநாயகா ஜூன் 7-ம் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையில் பிர தம மந்திரி ஆசனத்தில் முதல்முதலாக அமர்வார். முன்னர் திருமதி பண்டார நாயக்கா பிரதம மந்திரி யாக இருந்த பொழுது (1960-64) செனட் சபையி லேயே இருந்தார். அவர் விரும்பியிருப்பின் மக்கள் பிரதிநிதிகள் சபைக்குப் போட்டியிட்டு தெரிவுபெற் றிருக்கமுடியும். இதை அப் போது ஐக்கிய தேசியக் கட் சியினர் கண்டித்தபோதி லும் அரசியல் சாஸனம் இதைப் பூரணமாக அனும திக்கின்றது.

முன்னாள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார். 1960-64ல் இதே பதவியை அவர் வகித்துள் ளார். அப்பொழுது 157 அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 30 உறுப்பினர் கள் இருந்தனர். இம்முறை அதன் எண்ணிக்கை 17 ஆகக் குறைந்துவிட்டது. முழு எதிர்க்கட்சியுமே 33 அங்கத்தவர்களை மாத்திரம் கொண்டதாகவிருக்கின்றது

முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காடவுன் அவரது மந்திரிசபையில் சகாக்களாகவிருந்த திரு. ஜே ஆர் ஜயவர்த்தன, திரு. டபிள்யு தஹநாயக்கா, திரு. வி. ஏ சுகததாசா திரு. ஆர் ஏ பிரேமதாசா, திரு. ஈ எல் சேனநாயக்கா ஆகிய வர்கள் முன் வரிசையில் அமர்வார்கள். இவர்களு டன் தமிழரசுக் கட்சித்தலை வர்கள் திருவாளர்கள் எஸ் ஜே வி செல்வநாயகம், வி என் நவரத்தினம், வி தர்ம லிங்கம், கே பி ரத்தினம் ஆகியவர்களும், தமிழ்க்காங் கிரஸ் தலைவர்களும் அமர் வர். அரசாங்கத்தரப்பில் 90 ஆசனங்கள் மாத்திரமே இருப்பதால் அரசாங்க அங் கத்தவர்களில் ஒரு பகுதியி னர் எதிர்க்கட்சி பின் ஆசனங்களில் அமர்வார் கள். (சி பி ஏ)

# என்ஜினியரை......

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

விஞ்ஞானத் துறை நிபுணர் கள் இடம் பெறவேண்டும். இந்த குறைபாட்டை இந்த கூட்டணி அரசாங்க அமை ச்சர் அவைதான் தீர்த்து வைத்துள்ளது.

## பொருத்தமான அமைச்சர்

இலங்கை தபால் தந்தி சேவைகளிலே ஏன் சுணக் கம் ஏற்படுகிறது என்பதை புதிதாக கூட்டணி அரசாங் கத்தின் அமைச்சர் அவை யிலே தபால் தந்தி துறை அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ள அமைச்சர்குமார சூரியர் ஆராயப்போகிறார் என்ற தகவலை அறிந்தேன். மேல் நாடுகளிலே கடிதம் பிரிப்பதற்கு இயந்திரசாத னங்களைப் பயன்படுத்தப் படுகிறது. ஆனால் இங்கு மக்களின் கைகளே பயன் படுகின்றன. இந்த நிலை யிலே எத்துணைகாரணங் களினால் இலங்கையில்தபால், தந்தி சேவைகள் சுணக்க மடைகின்றன என்பதை ஆராயவேண்டியது அதிமுக் கியமாகிறது.

தபால், தந்தி துறையிலே தாமதம் ஏற்படுவதற்குக் காரணமென்னை? இதை எந்த வகையில் நிவர்த்தி செய்யலாம் என்பதை முன்பு இங்கிலாந்திலும் ஆராய்ச்சிநடத்தினர். அந்த ஆராய்ச்சியின்போது ஒவ் வோர் ஊருக்கான கடிதங் களின் உறைகளின் நிறத் தில் தோற்றத்தில் மாற்றம் செய்வதன்மூலம், விலாசங் களை தெளிவாகஎழுதுவதின் மூலம் நிவர்த்திசெய்யலாம் என்ற முடிவிற்கு வந்தனர். இதேபோன்று நமது நாட் டிலும் ஆராய்ச்சி நடத்த வேண்டியது மிக அவசியம். இதே நேரத்தில் விலாசங் களை தெளிவாக எழுதுவ தின்மூலம் பொதுமக்களும் உதவிசெய்யவேண்டும்.

இப்படியாக ஒவ்வோர் துறை அமைச்சிலும் விஞ் ஞான பொறியியலாள நிபு ணர்கள் மந்திரியாக இரு க்கவேண்டும். திரு குமார சூரியர் ஒரு பொறியியலா ளர் விஞ்ஞான துறை நிபு ணர் இம்படியானவர்கள் அமைச்சர்களாக இருப்ப தின் காரணமாக இலங்கை யில் பொறியியல் விஞ்ஞா னத்துறைத் திட்டங்களுடன் ஈடுபாடுள்ள சகல திட்டங் களும் விரைவில் விருத்தி யடைவதுடன் பலமுன் னேற்றங்களும் இடம் பெறும்.

## யாழ்ப்பாணம் சந்தைபற்றி

இந்தநாட்டின் அபிவிருத் தித் திட்டத்தில் விவசாயத் தைப்போல் கட்டிடங்களும் முக்கிய இடம்பெறுகின்றன வென்றால் யாழ்ப்பாணத் தைப் பொறுத்தவரையில் இந்த சந்தை கட்டிடமும் முக்கிய அம்சம் வகிக்கின் றது.

இதுவரையில் எமது சந் தைக் கட்டிடம் முடிவடைந் திருக்கவேண்டியது இன் னும் பூர்த்தியாகாமைக்குக் காரணம், ஆரம்பத்தில் இதில் உள்ளூர் அரசியல் ஈடுபாடுகள் தலையிட்டதே. ஆனால் இப்பொழுது சில காலமாக, இந்த உள்ளூர் அரசியல் தலையீடுகள்கூடாது என்று அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்பொழுது இருக்கின்ற நகர பிதா திரு. ரி. எஸ். துரைராஜா தமது கட்டிடத் துறையிலுள்ள அனுபவத்தை எமக்குப் பூரணமாகக்காட்டி ஒத்துழைப்பதின் மூலம் நாம் இதில் வளர்ச்சியும், உயர்ச்சியுமடைகிறோம் என் கது இங்கு குறிப்பிடத்தக் கது. இந்தக் கூட்டணி அர சாங்கமும், உள்ளூர் அரசி யலில் எதுவித கெடுதியான மாற்றங்களைச்செய்யாதென் றும், எமது கட்டிடவேலை தடைபடாது விரைவில் பூர்த்தியாகும் என்று நான் நம்புகிறேன். எனவே பொது மக்களின் ஒத்துழைப்பும், பொறுமையும், யாழ். நகர சபை அதிகாரிகளின் ஒத்து ழைப்பும், ஆண்டவன்அனுக் கிரகமும் இருந்தால் இந்தச் சந்தைக் கட்டிடம் 1670-ம் ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி யாகிவிடும் என்றார் அவர்

(மட்டு, நிரு.)

# உரும்பராய் இந்துக்கல்லூரிக்கு பொற்காலம் தந்த அதிபர்

## வயித்திலிங்கம்

உரும்பராய் இந்துக் கல்லூரியில் பன்னீராண்டு காலம் சேவைபுரிந்து ஓய்வு பெற்றுக் கொண்ட அதிபர் திரு. அ. வயித்திலிங்கம் அதிபர் இனத்துக்கு ஒரு மணியாகவும் ஆசிரிய குலத் துக்கு ஓர் அணியாகவும் திகழ்ந்தவர். அவரை அறி யாத ஆசிரியர் இல்லை; அவ் ரைப்போற்றாத மக்களு மில்லை.

இணையற்ற திறனும், அன் பும் பண்புமுடைய இவர், வட்டுக்கோட்டையைப் பிற ப்பிடமாகக் கொண்டவர். அவ்வூரிலுள்ளயாழ்ப்பாணக் கல்லூரியில் தமது இளம் பராயக் கல்வியைப் பெற்ற பின் இலங்கைப்பல்கலைக் கழகக்கல்லூரியிற்சிலகாலம் பயின்றார். இங்கிலாந்து சென்று லண்டன் சர்வகலா சாலையிற்சேர்ந்து பி.எஸ்.ஸி சிறப்புப் பட்டத்தையும் கேம்பிறிஜ் சர்வகலாசாலை யில் பி. ஏ. சிறப்புப் பட் டத்தையும் பெற்றார். இங்கி லந்தில் கல்விபயிலுங் கால த்திலேயே பொதுவுடமைக் கொள்கையினால் கவரப் பட்டஇவர் இந்நாடு திரும் பியதும் தொண்டுமனப் பான்மை கொண்டு பல் லாண்டுகாளாகப் பொதுவு டமைக் இயக்கப்பணியி லேயே ஈட்டுண்டிருந்தார். இவரது தொண்டுள்ளம் அரசாங்க உயர்பதவிகளை எல்லாம்துச்சமாக மதித்து ஒதுக்கியது. ஆயினும் சில சூழ்நிலைகள் காரணமாக இவர் 1951ம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியில் ஓர் ஆசிரியராகச் சேர்ந்தார். இங்கு 7ஆண்டு கள் இவரது சேவை நீடித் தது. இக் காலத்திலேதான் இவரது அபாரமான படிப் பித்தற் திறமையினால் இக் கல்லூரியின் பொறியியற் பிரிவு மிகத்திறமையடைந் தது. இதனால் இக்கல்லூரி யின் புகழ் எங்கும்பரவலா யிற்று. இவரது திறமையை நன்கு அறிந்து கொண்ட யாழ்ப்பாண இந்துக்கல்லூரி அதிகார சபையார் 1958ம் ஆண்டில் இவரை உரும்ப ராய் இந்துக் கல்லூரியின் அதிபராக நியமித்தனர். இது உரும்பராய்க்கு ஓர் பேரதிஷ்டமாயிற்று.

இவரது காலத்தில் உரும் பராய்இந்துக்கல்லூரி அடை ந்த பெருவளர்ச்சி அளவி டற்கரியதாகும். இவர்வந்த ஞான்று கொட்டில்களாய்க் காட்சியளித்த கல்லூரிக்கட் டிடங்கள் இவரதுகாலத்தில் கோபுரங்களாக மாறின. நவீன ஆய்வுகூடவாய்ப்பு டன் கூடிய பொன்விழா மண்டபம் ஒன்றும், சித்திர கூடம், நூல்நிலையம் முதலிய வற்றோடு கூடிய சிறந்த நிர் வாக மண்டபம் ஒன்றுமாக வானுயர் தோற்றமும் வனப்பும் வண்ணமும் வாய்ந்த மேல்மாடிக் கட்டி டங்கள் இரண்டு இவர்கால த்தில் நிர்மாணிக்கப்பட்டன அவைஎன்றும் ஓய்வுபெற்ற அதிபர் திரு. அ. வயித்தி யலிங்கத்தின் புகழ்பாடி நிற்கும் தகையன. அன்று கல்லும் கரடுமாய்ப்பற்றை யும் புதரும் நிறைந்து கிடந்த கல்லூரி விளையாட்டு நிலம் இன்று மதில் சூழ்ந்த பெரும் விளையாட்டிடமா கக் காட்சியளிக்கின்றது. சீரானபாதையொன்றும் அமைக்கப்பட்டதோடு மேலதிகமான நிலமும் வாங் கிச்சேர்க்கப்பட்டிருக்கிறது. இவர் வரும்பொழுது இரண் டாந்தரமாக விருந்த இக் கல்லூரி இவர் காலத்தில் முதலாந்தரத்திற்கு உயர்த் தப்பட்டிருக்கிறது விவசா யக்கல்வி புதிதாகப் புகுத் தப்பட்டுத் தொழிற்கல்வி வாய்ப்பு அளிக்கப்பட்ட தோடு இதற்கென நிலமும் வாங்கப்பட்டுள்ளது பல் கலைக்கழகப்புகுமுக வகுப்பு கள் புதிதாக அமைக்கப் பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றன. கலைப்பிரிவி லும் பொறியியற் பிரிவிலும் மாணவர் பலர் தேர்ச்சி யடைந்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாகும் வாய்ப்புப் பெற்றனர்.

உரும்பராய் இந்துக்கல் லூரிக்குப் பொற்காலத் தைத் தந்த இளைப்பாறிய அதிபர் திரு. அ. வைத்திய லிங்கத்தை உரும்பராய் மக் களும், கல்லூரி ஆசிரியர் களும், மாணவர்களும் எக் காலத்தும் மறப்பதற்கில்லை.

—செ. ஐயாத்துரை.


# திருமண அழைப்பு

## சர்வேந்திரன் — பூங்கோதை

சுன்னாகம் பொ. சரவணமுத்து தம்பதிகளின் மகன் சர்வேந்திரன் (Partner, Satchithananada Schokman Wijeyaratna & Co., Chartered Accountants) க்கும் மல்லாகம் ச. அம்பிகைபாகன் தம்பதிகளின் மகள் **பூங்கோதைக்கும் 10-6-70** புதன்கிழமை இரவு **7 மணிக்கும் 8 மணிக்குமிடையில்** வரும் சுபமுகூர்த் தத்தில் மணமகள் இல்லத்தில் (''மணிமனை'', மல் லாகம்) திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

2294



இப் பத்திரிகை ''ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



# மரண அறிவித்தல்

## பராசக்தி அம்மா

புங்குடுதீவு ஆர் கிருஷ்ண பிள்ளையின் மனைவியார் பரா சக்தி அம்மா காலமாகிவிட் டார். இவர் நாகேஸ்வரி, இரத்தினகோபால், இரா ஜேந்திரம் ஆகியோரின் தாயாரும், வேலுப்பிள்ளை சீனிவாசகம் இராசையா, அன்னபூரணம், கணேசமூர் த்தி ஆகியோரின் சகோதரி யும் செல்லத்துரை (கொழு ம்பு, யாழ் செ. ஆ. செ. அன் கோ, யாழ். இராணி ஆபரணமாளிகை) புவனே ஸ்வரி, சரோஜாதேவி ஆகி யோரின் மாமியுமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று பகல் 10 மணியளவில் புங் குடுதீவு 6-ம் வட்டாரத்தி லுள்ள இல்லத்திலிருந்து கேரதீவு மயானத்துக்குஈமக் கிரிகைக்கு எடுத்துச் செல் லப்படும். அனைவரும் அறி வித்தலை ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்தருபவர்: பிள்ளை கள். 2134



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org